Registered as a Newspaper பக்கங்கள் 12 விலை ரூ. 50

புதன் பொய்கை

# உதயன்

சுடர் : 38
கதிர் : 347

புதன்கிழமை 08 நவம்பர் 2023

ஐப்பசி 22 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

# இந்தியக் கடன்களுக்காக கச்சதீவு தாரைவார்ப்பா?

## ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்றில் கேள்வி

**கொழும்பு, நவம்பர் 8**

**இந்தியா வழங்கியுள்ள கடனை இரத்துச்செய்து கொள்வதற்காக, இலங்கையில் வடக்கு கடல் எல்லை மற்றும் கச்சதீவு ஆகிய விவகாரங்களில் அரசாங்கம் விட்டுக்கொடுப்புகளை மேற்கொள்ளவுள்ளதா? என்று கேள்வி எழுப்பியுள்ளார் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நிரோஷன் பெரேரா.** »11

இந்தியாவின்

## இழுவைப்படகுகளை அனுமதிக்கமாட்டோம்!

### இதுவே அரசின் நிலைப்பாடு என்கிறார் டக்ளஸ்

கொழும்பு, நவ. 8
இந்திய இழுவைப் படகுகளை ஒரு விநாடிகூட இலங்கை கடற்பரப்புக்குள் அனுமதிக்கக்கூடாது என்பதே எனது உறுதியான நிலைப்பாடாகும் என்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் »11

இலங்கை கிரிக்கெட் விவகாரம்;

## இடைக்காலக் குழுவை நீக்குமாறு மிரட்டல்!

### ஜனாதிபதி ரணில் மீது அமைச்சர் குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 8
நியமிக்கப்பட்ட இடைக்கால கிரிக்கெட் குழுவை நீக்குமாறு அமைச்சரவையிலும், அதன் பின்னரும் ஜனாதிபதி ரணில் என்னை மிரட்டினார் என்று விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க நாடாளுமன்றத்தில் நேற்று பரபரப்புக் குற்றச்சாட்டை முன்வைத்தார். »11

## வாள்களால் வெட்டி நகைகள் கொள்ளை

முல்லைத்தீவு, நவ. 8
முல்லைத்தீவு - சமணங்குளம் பகுதியில், வீடொன்றுக்குள் நுழைந்த காடையர்கள் அங்கு வாள்வெட்டுத் தாக்குதலை மேற்கொண்டு பணம், நகை என்பவற்றைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர். »11

## 137 கிலோ கஞ்சாவுடன் படகு மடக்கிப்பிடிப்பு!

கொழும்பு, நவ. 8
யாழ்ப்பாணம், எழுவைதீவுக் கடற்பரப்பில் 137 கிலோ கஞ்சாவுடன் படகொன்று கடற்படையால் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளது. »11

இடைக்காலத்துக்கு நியமிக்கப்பட்ட

## கிரிக்கெட் சபைக்கு நீதிமன்றத்தால் தடை

கொழும்பு, நவ. 8
விளையாட்டுத்துறை அமைச்சரால் நியமிக்கப்பட்ட கிரிக்கெட் இடைக்கால நிர்வாகக் குழு மற்றும் இலங்கை கிரிக்கெட் நிறுவனத்துக்கான வர்த்தமானி அறிவித்தலை அமுல்படுத்துவதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது. »11

இலங்கை கிரிக்கெட்

## அதிரடி முடிவு இன்று வரும்?

கொழும்பு, நவ. 8
இலங்கைக் கிரிக்கெட் தொடரில் இன்று பல அதிர்ச்சிகர முடிவுகள் வெளிவரும் என்று »11

## தபால் அலுவலர்களின் விடுமுறைகள் இரத்து!

கொழும்பு, நவ. 8
இன்றும், நாளையும், நாளைமறுதினமும் தபால் அலுவலர்களால் விண்ணப்பிக்கப்பட்டிருந்த விடுமுறைகள் அனைத்தும் இரத்துச் செய்யப்படுவதாக தபால்மா அதிபர் தெரிவித்துள்ளார். »11




மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மக்களுக்கு எதிரான சட்டங்களுக்கு கை உயர்த்துவோருக்கு எச்சரிக்கை



## அச்சட்டங்கள் அவர்களுக்கு எதிராகவும் பாயும் என்கின்றார் சாலிய பீரிஸ்

கொழும்பு, நவ.8

**நாட்டு மக்களின் ஜனநாயக உரிமைகளுக்கு எதிராக உருவாக்கப்படும் சட்ட வரைவுகளுக்கு கையுயர்த்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அந்தச் சட்டங்கள் என்றாவதொரு நாள் தமக்கு எதிரானதாக அமையும் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும்.**

- இவ்வாறு சட்டத்தரணிகள் சங்கத்தின் முன்னாள் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் தெரிவித்துள்ளார்.

சட்டத்தரணிகள் கூட்டிணைவின் ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இலங்கை மன்றக் கல்லூரியில் 'வாயை மூடும் சட்டங்கள் வேண்டாம்' என்ற தொனிப்பொருளின் கீழ் இடம்பெற்ற மாநாட்டில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நீதிமன்றத்தால் மாத்திரம் சகல பிரச்சினைகளுக்கும் தீர்வுகாண முடியாது. நிகழ்நிலைக்காப்புச் சட்ட வரைவு, பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட வரைவு என்பனவற்றை அரசாங்கம் மீளப்பெறும் அளவுக்கு மக்கள் போராட்டத்தை ஒன்றிணைக்க வேண்டும். அதற்கு சட்டத்தரணிகள் கூட்டிணைவு என்ற அடிப்படையில் ஒத்துழைப்பு வழங்குவோம்.

அரசாங்கத்தால் தயாரிக்கப்பட்டுள்ள நிகழ்நிலை காப்பு சட்ட வரைவு, உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட வரைவு என்பனவற்றுக்கு மக்கள் எதிர்ப்பு தெரிவிக்க முடியாது. எதிர்ப்பு தெரிவித்தால் 'வாயை மூடு -அமரு' என்று அரசாங்கம் குறிப்பிடுகிறது.

மறுபுறம் பொருளாதார பாதிப்பு, ஊழல் மோசடி ஆகியவற்றுக்கு எதிர்ப்பு தெரிவித்து பத்து பேர் ஒன்று கூடி வீதியில் போராட்டத்தில் ஈடுபட முடியாது. 10 பேரின் போராட்டத்தை 100 பொலிஸார் ஒன்றிணைந்து அடக்குகிறார்கள். கண்ணீர் புகை வீச்சி மற்றும் நீர்த்தாரை பிரயோகித்துப் போராட்டத்தை கலைக்கப்படுகின்றன.

பொருளாதாரப் பாதிப்புக்கு மத்தியில் அரசாங்கத்தின் மோசடிகளைச் சுட்டிக்காட்டி மக்களுக்கு உண்மையை எடுத்துரைக்கும் தொழிற்சங்கங்கள் இலக்கு வைக்கப்படுகின்றன. அதற்காகவே நிகழ்நிலைக்காப்புச் சட்ட வரைவு, பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவு என்பன தயாரிக்கப்பட்டுள்ளன.

சர்ச்சைகளை ஏற்படுத்திய நிகழ்நிலைக்காப்புச் சட்ட வரைவு, உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவு என்பவற்றால் எதிர்காலத்தில் ஏற்படும் விளைவுகள் தொடர்பாக 225 நாடாளுமன்ற உறுப்பினர்களும் அவதானம்செலுத்தவேண்டும். இந்த நாட்டில் போராட்டம், ஊடக அடக்குமுறை என்பது புதியதல்ல. வாயை மூடும் சட்டமூலங்களுக்கு ஒட்டுமொத்த மக்களும் எதிர்ப்புத் தெரிவிக்கவேண்டும் - என்றார். (எ-இ)

## தமிழ் மக்கள் மீதான அடக்குமுறை வரலாறு தெளிவூட்டல் கண்காட்சி

### சங்கிலியன் பூங்காவில் இன்று

யாழ்ப்பாணம், நவ. 8

துன்பங்களுக்கும் துயரங்களுக்கும் உள்ளாக்கப்பட்டு - அடக்கப்பட்டு - ஒடுக்கப்பட்டு வரும் தமிழ் மக்களின் நிலைமை எடுத்துக்காட்டும் வகையில் 'இலங்கையில் வடக்கு - கிழக்கு தமிழரின் சமஷ்டி கோரிக்கையின் தோற்றம்' எனும் தொனிப்பொருளில் கண்காட்சியும் வரலாற்றுத் தெளிவூட்டலும் இன்று புதன்கிழமை சங்கிலியன் பூங்காவில் இடம் பெறவுள்ளது.

வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட கௌரவமான அரசியல் தீர்வு வேண்டிய 100 நாள் செயல்முனையின் இறுதிநாளில் எடுக்கப்பட்ட மக்கள் பிரகடனத்தின் ஓராண்டு நிறைவையொட்டி இந்த நிகழ்வு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு ஊடகங்களுக்கு அனுப்பிவைத்த அறிக்கையில் உள்ளதாவது:-

இலங்கைத் தீவிலுள்ள வடக்கு - கிழக்கு தமிழ் மக்கள், கடந்த 1505 ஆண்டு வந்தடைந்த போர்த்துக்கேயர் காலம் தொடங்கி ஒல்லாந்தர், இறுதியான காலனித்துவ ஆங்கிலேயர் ஆட்சிக் காலம் மற்றும் 1948 ஆம் ஆண்டுக்குப் பின்னரான இலங்கை சிங்களப் பேரினவாத அரசின் இன்றுவரையான ஆட்சிக்காலம்வரை பலவகையானதுன்பங்களுக்கும் துயரங்களுக்கும் உள்ளாக்கப்பட்டு - அடக்கப்பட்டு- ஒடுக்கப்பட்டு வருகின்றனர்.

தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு வேண்டிய பல்வேறு போராட்டங்கள் - சந்திப்புகளை மேற்கொண்டதுடன் குறிப்பாக அரசியல் தீர்வு தொடர்பான ஒப்பந்தங்களும் பேச்சுகளும் தமிழ் தலைவர்களால் காலனித்துவக் காலங்களிலும் அதற்குப் பின்னராக இலங்கையில் மாறி மாறி ஆட்சிக்கு வந்த சிங்கள அரசின் தலைவர்களுடனும் மேற்கொள்ளப்பட்டன. இவை அனைத்தும் குறிப்பாக சிங்களத் தலைவர்களால் நிராகரிக்கப்பட்டு ஏமாற்றப்பட்ட வரலாறுகளே அதிகம்.

அந்தவகையில் இலங்கையில் வடக்கு - கிழக்கு தமிழரின் சமஷ்டிக் கோரிக்கையின் தோற்றம் தொடர்பான இந்தக் கண்காட்சியும் வரலாற்றுத் தெளிவூட்டலும் இடம்பெறுகிறது.

வடக்கு -கிழக்கு வாழ் தமிழ் மக்கள், சிவில் செயற்பாட்டாளர்கள், அரசியல் தலைவர்கள், ஆய்வாளர்கள், கல்விமான்கள், பல்கலைக்கழக மாணவர்கள் , தொழிற்சங்கப் பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள், பெண் மனித உரிமைப் பாதுகாவலர்கள் எனப் பலரும் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்கிறோம் - என்றுள்ளது . (ச-60)



## கசிப்புக்கோட்டை முற்றுகை 43 பரல்களில் கோடா மீட்பு!

### தருமபுரத்தில் சம்பவம்

கிளிநொச்சி, நவ. 8

கிளிநொச்சி, பெரியகுளம் பகுதியில் கசிப்பு காய்ச்சுமிடம் முற்றுகையிடப்பட்டு 43 பரல்கள் கோடா மீட்கப்பட்டுள்ளது.

தருமபுரம் பொலிஸாருக்கு நீண்டநாட்களாகக் குறித்த இடத்தில் கசிப்புக் காய்ச்சப்படுகிறது எனக் கிடைத்த தகவலுக்கமைய நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இந்தக் குற்றச்செயல் முறியடிக்கப்பட்டது.

சோதனை நடவடிக்கையின்போது பொலிஸாரைக் கண்டதும் சந்தேகநபர்கள் தப்பியோடிய நிலையில் 43 பரல்களில் கோடா கைப்பற்றப்பட்டது. சம்பவம் தொடர்பில் சந்தேகநபர்களைக் கைதுசெய்ய மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்று தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டி.எம். சதுரங்க தெரிவித்தார். (ச-113)

## பணயக் கைதியாகவிருந்த லலித் கொத்தலாவல!

### உறவினர்கள் தகவல்

கொழும்பு, நவ.8

சிலிங்கோ குழுமத்தின் முன்னாள் தலைவர் லலித் கொத்தலாவல சிலரால் பணயக் கைதியாக வைக்கப்பட்டிருந்தார் என்றும், அவர் சுதந்திரமாக நடமாடுவதற்கு அனுமதிக்கப்படவில்லை எனவும் அவரது குடும்பத்தினர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர்.

லலித்கொத்தலாவலவை பணயக்கைதியாக வைத்திருந்த சட்டத்தரணிகள் உட்பட்ட குழுவினர் அவரை அச்சத்தின்பிடியில் சிக்கவைத்தனர் என அவரது உறவினரான சிறீனி விஜயரட்ண நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

கொழும்பு மேலதிக நீதிவான் முன்னிலையில் லலித் கொத்தலாவவின் இறப்பு விசாரணை இடம்பெற்றபோதே குடும்பத்தவர்கள் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

லலித்கொத்தலாவவைச் சுற்றியிருந்தவர்கள் அவரின் சொத்துகளை தங்கள் பெயருக்கு எழுதி வாங்கிக்கொண்டனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கொத்தலாவல இருட்டறையில் அடைத்துவைக்கப்பட்டிருந்தார். அவரது படுக்கை அறையிலிருந்துதனது அலுவலக அதிகாரிகள் கூட்டத்துக்குச் செல்வதற்கு மாத்திரம் அனுமதிக்கப்பட்டார் என அவர் தெரிவித்துள்ளார். அவரை வீட்டிலிருந்து வெளியேறச்செய்து அலுவலகத்திலேயே இருண்ட அறையொன்றுக்குள் அவர்கள் தங்கவைத்தனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

## மனுவைத் தள்ளுபடி செய்த உயர் நீதிமன்று

கொழும்பு, நவ.8

பயங்கரவாதத் தடுப்புச் சட்ட வரைவுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட மனு உயர் நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. சட்ட வரைவு ஒழுங்குப் புத்தகத்தில் சேர்க்கப்படாததால் அதை ஆராயமுடியாது என உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளது என்று பிரதிச் சபாநாயகர் அஜித் ராஜபக்ச நாடாளுமன்றத்தில் அறிவித்துள்ளார். (எ-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# 13ஆவது திருத்தம் சாத்தியமற்ற ஒன்று

## விமல் தரப்பு தெரிவிப்பு

கொழும்பு, நவ.8

**அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டம் இலங்கைக்கு பலவந்தமாகத் திணிக்கப்பட்டதொன்றாகும். நடைமுறைக்குச் சாத்தியமற்ற விடயங்களும் அதில் உள்ளன. இலங்கை மண்ணில் ஒருபோதும் அதை முழுமையாக நடைமுறைப்படுத்தமுடியாது.**

- இவ்வாறு விமல் வீரவன்ஸ தலைமையிலான உத்தரலங்கா சபாகய என்ற அரசியல் கூட்டணியின் பிரதிச் செயலாளரும், யுதுகம அமைப்பின் தலைவருமான நாடாளுமன்ற உறுப்பினர் கெவிந்து குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அரசமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டம் இலங்கைக்குப் பலவந்தமாகத் திணிக்கப்பட்டதொன்றாகும். அயல்நாடு பருப்புப் போட்டு, முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனவை அடிபணிய வைத்தே சட்டம் கொண்டுவரப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஹோட்டலில் வைக்கப்பட்டு, இராணுவப் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது. இவ்வாறு நிறைவேறிய சட்டத்தை ஜே.ஆர். ஜெயவர்த்தன முழுமையாக நடைமுறைப் படுத்தவில்லை. ரணதுங்க பிரேமதாஸவும் அதற்கு உடன்படவில்லை. அவர் இந்திய இராணுவத்தை இங்கிருந்து வெளியேற்றினார். அதிகாரப் பகிர்வைப் பற்றி பேசி ஆட்சிக்கு வந்த சந்திரிகாவும் 13 ஐ முழுமையாக நடைமுறைப் படுத்தவில்லை.

இந்த மண்ணில் 13 ஐ முழுமையாக நடைமுறைப்படுத்தவும் முடியாது. ஏனெனில் நடைமுறைக்குச் சாத்தியமற்ற விடயங்கள் அதில் உள்ளன. இந்த நாட்டில் இல்லாத சரத்துகள்கூட உள்ளன.

2009 ஆம் ஆண்டு போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்ட நாட்டுக்கு புதிய அரசமைப்பு அவசியம்.

அதற்காகவே கோத்தாபய ராஜபக்சவுக்கு நாட்டு மக்கள் வாக்களித்தனர். அரசமைப்பு மறுசீரமைப்புக்காகவே நாடாளுமன்றத் தேர்தலில் மூன்றிரண்டு பெரும்பான்மை ஆதரவு வழங்கப்பட்டது. மக்களின் இந்த ஆணைக்குப் புறம்பாகச் செயற்பட முடியாது - என்றார். (எ-44)

# ஐ.ஓ.சி. எரிபொருள் விற்பனை 20 ஆண்டுகளுக்கு அனுமதி!

## ஐ.ம.ச. எதிர்ப்பு

இலங்கை - இந்தியாவுக்கு இடையே நல்லுறவின் நிமித்தம் ஐ.ஓ.சி.யின் எரிபொருள் விற்பனை அனுமதிப்பத்திரம் 20 வருடங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய ஐ.ஓ.சி. நிறுவனம் இலங்கையில் 2044 ஆம் ஆண்டு வரை எரிபொருள் விற்பனை செய்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - இந்த ஒப்பந்தம் வெளிப்படைத்தன்மையற்றது எனத் தெரிவித்து ஐக்கிய மக்கள் சக்தி எதிர்ப்பு வெளியிட்டுள்ளது. இதுதொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதிச் செயலாளர் நாயகம் முஜிபுர் ரஹ்மான் ஊடகங்களுக்குத் தெரிவிக்கையில்;

2001 ஆம் ஆண்டு 70 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டில் எரிபொருள் விற்பனை செய்வதற்கு ஐ.ஓ.சி. நிறுவனத்துக்கு அனுமதி வழங்கப்பட்டது. அப்போது வெளிப்படைத்தன்மையான கேள்வி கோரப்படவில்லை.

ஐ.ஓ.சி. நிறுவனம் மூன்று பில்லியன் டொலரை இலங்கையிலிருந்து இலாபமாகப் பெற்றுள்ளது. தற்போது ஐ.ஓ.சி.யின் எரிபொருள் விற்பனை அனுமதிப்பத்திரம் மேலும் 20 வருடங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

தற்போதும் முறையான வெளிப்படைத்தன்மையான கேள்வி கோரப்படவில்லை. இலங்கையில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்ட போது ஐ.ஓ.சி. உரிய முறையில் எரிபொருள் வழங்கலை மேற்கொள்ளவில்லை என்றும் அவர் தெரிவித்தார். (ச-6)

# ஜனகவுக்கு கொலை மிரட்டல்; இரு சந்தேகநபர்கள் கைது!

கொழும்பு, நவ.8

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் ஜனக ரத்நாயக்கவுக்கு கொலை மிரட்டல் விடுக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் மேலும் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தொலைபேசியில் கொலைமிரட்டல் விடுத்து பலவந்தமாக 15 இலட்சம் ரூபா கப்பம் பெற்றமை தொடர்பில் பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் ஜனக ரத்நாயக்க கிருலப்பனை பொலிஸில் செய்த முறைப்பாட்டின் பிரகாரம் கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டனர்.

இந்தச் சம்பவத்தின் பிரதான சந்தேகநபர் தலைமறைவாகுவதற்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்த மற்றும் உதவி செய்த இரண்டு சந்தேகநபர்களே தம்புள்ள, பல்வெஹர பிரதேசத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 38 மற்றும் 40 வயதுடையவர்கள். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (எ-இ)

# ஐ.தே.க.வுடன் இணையும் தீர்மானம் ஏதும் இல்லை

## சுகாதார அமைச்சர் கூறுகிறார்

கொழும்பு, நவ.8

அடுத்த பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து போட்டியிடுவது தொடர்பில் எந்தவொரு முடிவையும் எடுக்கவில்லை என்று சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்துள்ளார்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க போட்டியிட்டால் அவரை ஆதரிப்பீர்களா என எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இன்னும் மொட்டுக் கட்சியிலேயே அங்கம் வகிக்கின்றேன். எமது கட்சி அவ்வாறானதொரு முடிவை இன்னும் எடுக்கவில்லை. கட்சி எடுக்கும் முடிவின் பிரகாரமே எனது தீர்மானம் அமையும்.

நெருக்கடியான சூழ்நிலையில் ரணில் விக்கிரமசிங்க நாட்டைப் பொறுப்பேற்றார். ரணிலை கட்சி ஆதரிக்க முடிவெடுத்தால் அந்த முடிவை ஏற்பேன் என்றார். (எ-44)




# புதினம் தெரியுமோ?

இலங்கை அரசாங்கம் தேர்தல் ஒண்டையும் வைக்காமல் இழுத்தடிக்குது எண்டு எல்லாக் கட்சிக்காரரும் உலகமெல்லாம் ஒப்பாரி வைச்சுக்கொண்டு திரியினம். அதில எங்கட தமிழரசுக் கட்சியும் ஒண்டு. 'மாகாணசபையின்ர காலம் முடிஞ்சு வருசக் கணக்காப் போட்டுது. ஆனால் அரசாங்கம் அதை வைக்கிற சிலமனில்லை. உள்ளூராட்சிசபையளில மக்கள் பிரதிநிதியள் இல்லாததால வேலைத்திட்டமொண்டும் ஒழுங்காச் செய்யப்படேல' எண்டு தமிழரசுக் கட்சி, இஞ்ச வாற வெளிநாட்டுக்காரரிட்ட எல்லாம் மறக்காமல் முறைப்பாடு செய்யிறது. ஆனால் அப்பிடி தேர்தலை வைக்காமல் அரசாங்கம் ஏமாத்துது எண்டு அரசாங்கத்தைப் பார்த்து குற்றம் சாட்டுற தகுதி தமிழரசுக் கட்சிக்கு இருக்கா எண்டு திருப்பி ஆரும் கேட்டால், தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டுதான் வரோணும். ஏனெண்டால் அவையின்ர உட்கட்சித் தேர்தலையே ஒழுங்கா வைச்சு முடிக்காமல், வேணுமெண்டு காலத்தை இழுத்தடிச்சு தலைவர் பதவியைக் காப்பாத்த நினைக்கிற கட்சி எப்பிடி அரசாங்கம் தேர்தலை வைக்கேலை எண்டு கேள்வி கேக்கமுடியும்.

மாவையர் தமிழரசுக் கட்சிக்காகவே தன்ர வாழ்க்கையை அர்ப்பணிச்ச ஒருத்தர். கனபேர் 'பார்ட் ரைம்' வேலையா அரசியல் செய்யேக்க, மாவையர் முழுசா அரசியலுக்கையே இருந்து சனத்துக்காகப் பாடுபட்டவர். அதாலதான் தமிழரசுக் கட்சியின்ர தலைமைப்பதவியும் அவருக்குக் கிடைச்சது. ஆனால் நல்லவரா இருக்கிறது மட்டும் கட்சியின்ர தலைவரா இருக்கிறதுக்குரிய தகுதியில்லையே, வல்லவராயுமெல்லோ இருக்கோணும். மாவையர்தான் கட்சித் தலைவர் எண்டாலும், கட்சிக்குள்ள ஆர் தேசியப்பட்டியல் எம்.பி. யா வரவேணும் எண்டதுகூட அவருக்கே தெரியாமல்தான் நடந்தது. அப்பிடி அதுக்குப் பிறகும், அதைத் தடுக்கிற 'கட்ஸ்'அவரிட்ட இல்லை. எல்லாதையும் 'சரி, பாப்பம், செய்வம்' எண்டு சொல்லிட்டு கடந்து போனதால, எல்லாமே கைமீறிப் போய், இப்ப கட்சியே உருக்குலைஞ்சு போய் நிக்குது. 'தலைமை சரியில்லை' எண்டு எல்லாரிட்டையும் ஒரு எண்ணம் வந்ததால, கனபேர் அடுத்ததா தலைமைக்கு வாறதுக்கு உள்ளுக்கால வேலை செய்யினம். ஆனால் கட்சியின்ர மாநாட்டை வைச்சால் தன்ர தலைமை பறிபோகும் எண்டு அந்த மாநாட்டை வைக்காமலே மாவையர் இழுத்தடிச்சிருக்கிறார். அதுக்கு அவர் சொன்ன காரணம், 'வட்டாரக்கிளையள் இன்னும் தெரிவு செய்து முடியேல' எண்டதுதான். ஆனால் விசயம் என்னெண்டால், மெத்தப்படிச்சவை இருக்கிற இடமெண்டு சொல்லுற யாழ்ப்பாணம் மாவட்டத்தைத் தவிர மற்ற மாவட்டங்களில இந்த வட்டார, தொகுதி, மாவட்ட நிர்வாகத் தெரிவுகள் எல்லாம் முடிஞ்சுது. ஆனால் யாழ்ப்பாணத்தில அரையும் குறையுமாத்தான் உந்த உட்கட்சித்தேர்தல் நடந்திருக்கு. கன இடங்களில உறுப்பினர்களுக்கு அறிவிக்காமல்கூட கூட்டம் நடந்து, நிர்வாகத்தைத் தெரிவு செய்திருக்கினம்.

கட்சியின்ர நிர்வாகச்செயலாளரின்ர வட்டாரத்தில கூட, நூறு நூற்றைம்பது பேர் வரவேண்டிய இடத்தில, வெறும் எட்டுப் பேரோடதான் கூட்டம் நடந்திருக்காம். அதில மூண்டுபேர் கட்சியின்ர நிர்வாகச்செயலாளர், அவரின்ர மகள், மருமகன் எண்டு குடும்பத்துக்குள்ளேயே கூட்டம் நடத்தி இருக்கினம் மிச்சம் 5 பேர்தான் வெளியாக்கள். அப்பிடி 'குடும்பங்கள் கொண்டாடும்' உட்கட்சித் தேர்தலைக்கூட வைச்சு முடிக்காமல், அதுவரைக்கும் தலைமைப் பதவியைத் தலைமாட்டுக்க வைச்சிருக்க நினைக்கிறவை, அரசாங்கம் தேர்தலை நடத்தேலை எண்டு எந்த மூஞ்சையோட போய்க்கேப்பினம்?



-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆப்கானை வீழ்த்திய தனி ஒருவன்!

## மக்ஸ்வெல் என்னும் அரக்கன்




**உலகக்கிண்ணத் தொடரில் நேற்று இடம்பெற்ற ஆட்டத்தில் மக்ஸ்வெலின் காட்டடி தர்பாரால் ஆப்கானிஸ்தானை தோற்கடித்தது அவுஸ்திரேலிய அணி. இரட்டைச் சதம் விளாசிய மக்ஸ்வெல் இறுதிவரை ஆட்டமிழக்காதிருந்தார்.**

முதலில் துடுப்பெடுத்தாடிய ஆப்கானிஸ்தான் அணிக்கு குர்பராஸ் 21 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றினார். இப்ராஹிம் சடான், ரஹ்மட் ஷா இருவரும் இணைந்து அற்புதமான ஆட்டத்தை வழங்கினார்கள். பிறிதொரு இலக்கை இழக்காமல் 100 ஓட்டங்களைக் கடந்தது ஆப்கானிஸ்தான். 30 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் ரஹ்மட் ஷா. இப்ராஹிம் சடான் ஒருமுனையில் நிலைத்து அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். மறுமுனையில் வந்த வீரர்கள் அற்புதமாக ஆடாவிட்டாலும் சொல்லிக்கொள்ளும்படியான இணைப்பாட்டத்தை வழங்கினார்கள். சதம் கடந்தார் இப்ராஹிம் சடான். முடிவில் ஆப்கானிஸ்தான் அணி 5 விக்கெட்களை இழந்து 291 ஓட்;டங்களைப் பெற்றது. இப்ராஹிம் சடான் 129 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார்.

பந்துவீச்சில் ஹேசில்வூட் இரண்டு விக்கெட்டைக் கைப்பற்றினார்.

பதிலுக்குக் களமிறங்கிய ஆஸ்திரேலிய அணிக்கு ஆரம்பம் படுமோசமாக அமைந்தது. ட்ராவிஸ் ஹெட் ஓட்டமெதையும் பெறாது ஆட்டமிழந்தார். அதிரடி காட்டிய மிச்செல் மார்ஷ் 24 ஓட்டங்களில் அடங்கிப்போனார். வோர்ணர் 18 ஓட்டங்கள், லபுஷேன் 14 ஓட்டங்கள், இங்கில்ஸ் ஓட்டமெதையும் பெறாத நிலையில் வீழ்ந்தனர். மக்ஸ்வெல் ஒருமுனையில் நிலைத்து நின்றார். சிறு நம்பிக்கையை ஆரம்பத்திலேயே கொடுத்தார். ஆனால், ஸ்றொய்னிஸ் 6, ஸ்ராக் 3 என்று ஆட்டமிழக்க ஆஸ்திரேலிய அணி 91 ஓட்டங்களில் 7 விக்கெட்களை இழந்தது. களமிறங்கினார் கம்மின்ஸ். களமிறங்கி மறுநிமிடமே இருவரும் இணைந்து சிறிதுநேரம் கலந்துரையாடினர். இதன் பின்னர்தான் ருத்ரதாண்டவம் ஆரம்பமானது. கம்மின்ஸ் இலக்குச் சரிவைப் பாதுகாத்து அற்புதமான நம்பிக்கையைக் கொடுத்தார். மறுமுனையில் சாத்திய மற்ற அதிரடியை ஆரம்பித்தார் மக்ஸ்வெல். இலக்குச் சரிவு பிரிக்கப்பட்டபாடில்லை. 76 பந்துகளில் மக்ஸ்வெலின் சதம் பதிவானது. சதம் கடந்த சிறிது நேரத்தில் மக்ஸ்வெல் உபாதைக்கு உட்பட்டார். ஆயினும் களத்தில் வகுத்த கொள்கையை அவர்கள் மாற்றவில்லை. சிக்சரும் பவுண்டரிகளும் சீறிப்பாய்ந்தன. முடிவில் பிறிதொரு விக்கெட்டை இழக்காமல் வென்றது அவுஸ்திரேலியா. மக்ஸ்வெல் 128 பந்துகளில் 201 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார். (ம)

# எனக்கு அநீதி இழைப்பு பதில் மரியாதை தரேன்!

## மத்தியூஸ் ஆவேசம்




எம்மை மதிப்பவர்களுக்குத்தான் பதில் மரியாதை கொடுக்க முடியும். அதை விடுத்து அடிப்படை அறிவு இல்லாமல் செயற்படுபவர்கள் எங்களிடம் பதில் மரியாதையை எதிர்ப்பார்க்கக் கூடாது -என்று இலங்கை கிரிக்கெட் வீரர் மத்தியூஸ் தெரிவித்துள்ளார்.

உலகக்கிண்ணத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் மத்தியூஸை டெம் அவுட் முறைப்படி வெளியேற்றியது பங்களாதேஷ். கிரிக்கெட் வரலாற்றில் டைம்அவுட் முறையில் வெளியேற்றப்பட்ட முதலாவது வீரரானார் மத்தியூஸ். இந்த ஆட்டத்தின் பின்னர் இலங்கை அணியினர் பங்களாதேஷ் அணியினருக்குக் கைகுலுக்க வராமல் தமது அதிருப்தியை வெளிப்படையாகத் தெரிவித்தனர். இந்த நிலையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார் மத்தியூஸ்.

'நான் எந்தத் தவறும் செய்யவில்லை. விதிகளின்படி, இரண்டு நிமிடங்களில் நான் தயாராகி கிரீஸுக்குள் வந்துவிட்டேன். ஆனால், ஹெல்மெட்டில் திடீரென பிரச்சினை வந்துவிட்டது. ஹெல்மெட்டின் பட்டை கிழிந்துவிடும் என்பது எனக்கு எப்படி முன்கூட்டியே தெரியும். வீரர்களின் பாதுகாப்பைப் பற்றி நாம் அதிகம் பேசுகிறோம். அப்படி இருக்கையில், நான் ஹெல்மெட் இல்லாமல் அல்லது பிரச்சினையான ஹெல்மெட்டுடன் ஆட வேண்டும் எனக் கூறுகிறீர்களா? என்று மத்தியூஸ் மேலும் தெரிவித்துள்ளார். (ம)

## உதயனின் பரிசுக்குவியல்

**தினம் ஒரு பரிசு 35**

**இங்கிலாந்து - நெதர்லாந்து அணிகளுக்கிடையிலான இன்றைய (08.11.2023) ஆட்டத்தில் வெற்றி பெறும் அணி எது?**

விடை : ..........................................

பெயர் : ..........................................
முகவரி : ..........................................
..........................................
தே.அ.இல : ..........................................
தொ.இலக்கம் : ..........................................

**மெகா பரிசு**

**2023 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரை வெல்லும் அணி எது?**

விடை : ..........................................

**2023 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் தொடர் ஆட்டநாயகன் யார்?**

விடை : ..........................................

பெயர் : ..........................................
முகவரி : ..........................................
..........................................
தே.அ.இல : ..........................................
தொ.இலக்கம் : ..........................................

- உலகக் கிண்ண கிரிக்கெட் கொண்டாட்டத்தின் பரிசுக் கூப்பன்கள் யாவும் உதயனில் பிரசுரமாகும். இந்தக் கூப்பன்களை நீலம் அல்லது சிவப்பு நிற பேனாவால் மாத்திரம் நிரப்பி அனுப்ப வேண்டும்.
- வெட்டி எழுதப்பட்ட, அழித்து எழுதப்பட்ட, பிரதியெடுக்கப்பட்ட தாளில் எழுதப்பட்ட எந்தவொரு கூப்பனும் நிராகரிக்கப்படும்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்ப முடியும்.
- தினம் ஒரு பரிசுக்குரிய (தினம் ஒரு கேள்வி) கூப்பன்கள் அன்றைய தினம் பி.ப. 4 மணிக்கு முன்னதாக அனுப்பப்படவேண்டும்.
- மெகா பரிசுக்குரிய கூப்பன் 17.11.2023 அன்று பி.ப. 4 மணிக்கு முன்னர் அனுப்பப்பட வேண்டும்.
- கூப்பன்கள் யாவும் **0767374444** என்ற வட்ஸப் இலக்கத்துக்கு தனித்தனியாக (தினம் ஒரு பரிசு, மெகா பரிசு) அனுப்பிவைக்கப்படவேண்டும்.
- தேசிய அடையாள அட்டை இல்லாத சிறுவர்கள் தமது பெற்றோரின் அல்லது பாதுகாவலரின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தைக் குறிப்பிட்டு அனுப்ப முடியும்.
- வெற்றியாளர்களின் விவரங்கள் உலகக்கிண்ண தொடர் முடிவடைந்த பின்னர் உதயனில் வெளியிடப்படும்.

## இன்றைய ஆட்டம்

இங்கிலாந்து - நெதர்லாந்து

இடம் : புனே
நேரம்: பி.ப. 2.00

## தினம் ஒரு பரிசு நாள் 33 இன் வெற்றியாளர்கள்

| | | | |
|---|---|---|---|
| சசிகரன் | - உடுப்பிட்டி | வ.தயாதீசன் | - பங்களாதேஷ் |
| ச.சுபாஸ்கரன் | - தவசிகுளம் | சி.சாந்தமூர்த்தி | - கைதடி மத்தி |
| இ.மனோகரி | - யாழ்ப்பாணம் | வி.விஷ்வாயினி | - தெல்லிப்பளை |
| த.மாணிக்கவாசகர் | - யாழ்ப்பாணம் | தே.தம்பிராஜா | - கட்டுடை |
| ந.அஹசியா | - அரியாலை மேற்கு | ஆ.ஆதித்தன் | - கெருடாவில் |
| செ.செல்வராசா | - காரைநகர் | ஜே.ஜேன்ஜோய் | - புதுக்குடியிருப்பு |
| [illegible] | - [illegible] | கி.எமில் | - கள்ளப்பாடு |
| [illegible] | - பருத்தித்துறை | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# அவநம்பிக்கைகள் ஆபத்தானவை

பௌத்தர்கள் வாழாத இடமொன்றில், தமிழ் மக்கள் பூர்வீகமாக வாழ்கின்ற பிரதேசமான திருகோணமலை, இலுப்பைக்குளத்தில் புத்தர் சிலைகள் நிறுவப்பட்டிருக்கின்றன. அங்கு அமைக்கப்படும் விகாரைக்கு பிரதேச தமிழ் மக்கள் பலமான எதிர்ப்பை வெளிப்படுத்திவரும் நிலையில் குறித்த கட்டுமானங்களை மேற்கொள்ள கிழக்கு மாகாண ஆளுநர் தடை விதித்திருந்தபோதும், அவற்றையெல்லாம் உதாசீனம் செய்து விகாரைக் கட்டுமானங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இலுப்பைக்குளத்தில் மட்டுமல்ல தமிழர்களின் பூர்வீக வாழிடங்களான வடக்கு–கிழக்கு மாகாணங்களில் பலபகுதிகளில் இவ்வாறான வலிந்த பௌத்த மயமாக்கல் தற்காலத்தில் வலுப்பெற்றிருக்கின்றது. சமீபத்திய உதாரணம், குருந்தூர்மலை, இப்போது இலுப்பைக்குளம். 'இலங்கை பௌத்த நாடு பௌத்தர்களுக்கே சொந்தமானது' என்னும் பேரினவாதச் சிந்தனையின் நீட்சியாக சிறுபான்மையினரின் வாழ்விடங்களைப் பறிக்கும் முயற்சியாகவே இந்த வலிந்த பௌத்தமயமாக்கல்களை நோக்க முடியும்.

பௌத்த மேலாதிக்க சிந்தனையாளர்களால் மேற்கொள்ளப்படும் இவ்வாறான சட்டவிரோத அடாவடித்தமான அபகரிப்புகளுக்கு எதிராக தமிழ் மக்கள் குரல் எழுப்பி வருகின்றபோதும், நாட்டின் நீதித்துறையோ, அதிகாரத் தரப்போ அலட்டிக்கொள்வதாக இல்லை. வடக்கு– கிழக்கில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட விகாரைகள் தொடர்பில் நீதிமன்றங்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் பல கட்டளைகளைப் பிறப்பித்திருந்தன. இருந்தபோதும், அவற்றை மீறியே விகாரைகள் அமைக்கப்பட்டன, அமைப்பட்டுவருகின்றன. தற்போது இலுப்பைக்குளத்திலும் கிழக்கு மாகாண ஆளுநரின் தடையுத்தரவை மீறி விகாரை அமைக்கும் பணிகள் நடைபெறுகின்றன, புத்தர் சிலைகளும் அங்கு கொண்டுவரப்பட்டிருக்கின்றன. இவ்வாறான அபகரிப்புகளுக்கு எதிராக போராடும் மக்கள் மீது தடாலடியாகப் பாய்கின்ற சட்டமானது, அபகரிப்புகளை மேற்கொள்வோரைக் கண்டும் காணாதது போலவே இருக்கின்றது. இவை அரசாங்கத்தின் மீதும் நாட்டின் நீதித்துறையின் மீதும் சிறுபான்மைத் தமிழ் மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையைச் சிதறடித்திருக்கின்றன.

தற்போது இன நல்லிணக்கம் தொடர்பில் பேசும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் அரசாங்கமும் நாட்டின் கடந்த காலத்தை அறியாதவர்கள் அல்லர். இலங்கையின் இனப் பிரச்சினையின் பிறப்பிடம் எதுவென்று தெரியாதவர்களும் அல்லர். ஒன்றன்பின் ஒன்றாக ஆட்சிக்கு வந்த பல்வேறு அரசியல் கூட்டணிகளுடன் கூடிய அரசாங்கங்கள் இந்த வன்முறையைத் தூண்டிய தேசிய பிரச்சினையின் மூல காரணங்களைக் கவனத்திலெடுக்கத் தவறியதே நாட்டின் இனப்பிரச்சினை பூதாகரமாக மாற தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டம் வீரியம்பெற முதற்காரணம் என்பதும் எல்லோருக்கும் தெரிந்தவிடயமே. அரசியல் ஆதாயங்களுக்காகவும் சுயலாபத்துக்காகவும் தமிழ் மக்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்துவிடப்பட்ட மிகப்பெரும் அடக்குமுறைகளும் பௌத்த மேலாதிக்கத்தை சிறுபான்மையினர் மீது திணிக்கும் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தத் தவறியமையுமே, வளம் மிக்க நாட்டை படுகுழியில் வீழ்த்தின. இந்தக் கறுப்பு வரலாறு நன்கு தெரிந்திருந்தும் கூட மீண்டும் மீண்டும் அந்தப்படுகுழியில் நாட்டையும், மக்களையும் தள்ளிவிழுத்துவதிலேயே குறியாக இருக்கின்றனர்.

பல தசாப்தப் போரால் உண்டான அழிவுகளின் பின்னர் நாட்டை மீட்டெடுப்பதற்குரிய சந்தர்ப்பம் வாய்த்திருக்கின்றது. நாட்டைக் கட்டியெழுப்ப புலம்பெயர் தமிழர்களை அழைக்கும் ரணில் விக்கிரமசிங்க, அனைத்து மக்களும் ஒப்புரவுடனும், சமத்துவத்துடனும், கண்ணியத்துடனும் நடத்தப்படும் சகிப்புத்தன்மை, ஒருமித்த உணர்வு, பாதுகாப்பு, பேணுகை என்பவற்றைக் கொண்ட ஒரு சூழலை நாட்டில் உருவாக்கவேண்டும். நாட்டின் சட்டத்தின் மீதும், நீதித்துறையின் மீதும் தமிழ் மக்கள் நம்பிக்கை கொள்ளும் நிலைமையை ஏற்படுத்த வேண்டும். தமிழ் மக்களின் நிலங்களில் மேற்கொள்ளப்படும் திட்டமிட்ட அபகரிப்புகளுக்கான தீர்வைப் பெற்றுக்கொடுக்க முயலவேண்டும். அவ்வாறில்லாவிட்டால் இந்த நாட்டின் ஒரு தொகுதி மக்களுக்கு நாட்டின் மீதும், நாட்டின் சட்டத்தின் மீதும், நீதித்துறையின் மீதும் ஏற்படும் அவநம்பிக்கை நாட்டைத் தொடர்ந்தும் அதல பாதாளத்திலேயே தள்ளிக்கொண்டிருக்கும்.


## வடமாகாண மரநடுகை மாதம்

நவம்பர் 2023

"எவரொருவர் ஒரு மரத்தை நடுகின்றாரோ, அவர் நம்பிக்கையை நடுபவர் ஆவார்.

-லியூசி லார்க்கோம் (அமெரிக்கக் கவிஞர்)






# ரணிலின் மீது நம்பிக்கை இழந்துள்ள நாட்டு மக்கள்

## ஆய்வில் வெளியான தகவல்

**கொழும்பு, நவ.8**

**இலங்கை அரசாங்கம் மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கை பெருமளவில் வீழ்ச்சியடைந்துள்ளது என்று நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்ட கருத்துக்கணிப்பில் தெரியவந்துள்ளது.**

ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தின் மீது இலங்கையில் 10 வீதத்துக்கும் குறைவானவர்களே நம்பிக்கை வைத்துள்ளதாக கொழும்பைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் வெரிட்டே ரிசேர்ச் அமைப்பு நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்ட ஆய்வு முடிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'தேசத்தின் மனநிலை' என்ற தொனிப்பொருளில் நடத்தப்பட்ட மக்கள் கருத்துக் கணிப்பில் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தின் அங்கீகாரம் ஜூன் மாதத்தில் 21 வீதமாக இருந்து நவம்பரில் 9 வீதமாகக் குறைவடைந்துள்ளது. நான்கு மாதங்களில் இது அரைவாசிக்கும் அதிகமாக வீழ்ச்சியடைந்துள்ளது.

கடந்த நான்கு மாதங்களில் அரசாங்கம் மீது மக்கள் கொண்டுள்ள திருப்தியானது 12 வீதத்தில் இருந்து 6 வீதமாகக் குறைந்துள்ளது. அதேபோல் பொருளாதார நம்பிக்கைக்கான சுட்டெண்ணும் 62 வீதத்திலிருந்து 44 வீதமாகச் சரிந்துள்ளது.

இந்தக் கருத்துக்கணிப்பில் அனைத்து அம்சங்களிலும் அரசாங்கத்தின் மீதான நம்பிக்கையில் பெரும் வீழ்ச்சியும், பின்னடைவும் ஏற்பட்டுள்ளது என்று தரவுகள் தெரிவிக்கின்றன.

'தேசத்தின் மனநிலை' கருத்துக்கணிப்பு ஆண்டுக்கு மூன்று முறை நடத்தப்படுகிறது. இந்தக் கருத்துக்கணிப்பில் பிழை வரம்பு அதிகபட்சமாக 3 வீதத்துக்கும் குறைவாக இருக்குமாறு வரையறுக்க வடிவமைக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# எரிசக்தித் துறையில் முதலிடு செய்யுங்கள்

## ஈரானிடம் வேண்டுகோள்

கொழும்பு, நவ. 8

இருநாட்டு உறவுகளையும் வலுப்படுத்தும் வகையில் இலங்கையின் எரிசக்தித்துறையில் முதலீடு செய்வதற்கு முன்வாருங்கள் என்று பிரதமர் தினேஷ் குணவர்த்தன ஈரான் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அலரிமாளிகையில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை பிரதமர் தினேஷ் குணவர்த்தன - ஈரான் தூதுவர் அலிரேசா டெல்கோஷ் ஆகியோரிடையே இடம்பெற்ற சந்திப்பின்போது அவர் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

இது தொடர்பில் ஈரான் தூதுவர் தெரிவித்துள்ளதாவது:-

ஈரானுக்கும் இலங்கைக்கும் இடையிலான பொருளாதார மற்றும் கலாசார உறவுகளை மேலும் விரிவுபடுத்துவதற்குப் பாடுபடுவேன். எரிசக்தித்துறை, விவசாயம் மற்றும் தொழில் துறை போன்ற புதிய துறைகளில் முதலீடு செய்வதற்கான வாய்ப்புகள் ஈரானுக்கு தற்போதுள்ளது - என்றார். (ச-6)

**நாளை** 09.11.2023 வியாழக்கிழமை ஐப்பசி 23

சுபநேரம் : 07.35 - 09.05
ராகுகாலம் : 01.35 - 03.05

ஏகாதசி விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

தோற்றம் 21 . 08 . 1946

மறைவு 05 . 11 . 2023



### திருமதி கமலாதேவி தில்லைநடராஜா

உரும்பிராய் கிழக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலாதேவி தில்லைநடராஜா கடந்த (05.11.2023) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிமுத்து சிவகொழுந்து தம்பதியரின் மகளும், சரவணமுத்து செல்லமுத்து ஆகியோரின் மருமகளும், தில்லைநடராஜா அவர்களின் அன்பு மனைவியும், மோகனகுமரன், தேவதாஸ், ரவி, சிவதாசன் ஆகியோரின் அன்புத் தாயாரும், யீவரஞ்சினி, மோகினி, சுகந்தினி ஆகியோரின் அன்பு மாமியாரும், மோகுலன், நிரோசன், யிரோசன், கரீஸ், அபினாத், ரக்சா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற சுந்தரேஸ்வரன் மற்றும் பரமேஸ்வரன், வசந்தமல்லிகா, காலஞ்சென்ற கமலேஸ்வரன், யமுனமலர் ஆகியோரின் அன்புச் சகோதரியும், தில்லைநாயகி, விஜயலக்சுமி, காலஞ்சென்றவர்களான ஞானேஸ்வரதேவி, சரஸ்வதி, செல்வநாயகம், காலஞ்சென்றவர்களான தங்கராஜா, சுப்பிரமணியம், மற்றும் ஸ்ரீகாந்தன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.11.2023) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இளங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஞானவைரவர் வீதி,
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.


தகவல்:
குடும்பத்தினர்.
077 172 6680

(CS 26865)A-1

## மரண அறிவித்தல்

பிறப்பு 10 . 06 . 1948

இறப்பு 06 . 11 . 2023



### அருட்தந்தை எஸ்.ஜே.இராஜநாயகம்

(முன்னாள் இயக்குநர், அகவொளி குடும்ப உளவள நிலையம்)

இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட யாழ். மறைமாவட்டக் குருவான அருட்பணி எஸ்.ஜே.இராஜநாயகம் அடிகளார் கடந்த (06.11.2023) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் திருவுடல் மக்களின் அஞ்சலிக்காக இன்று 8 ஆம் திகதி காலை 7.00 மணி முதல் மாலை 7.00 மணிவரை வைற் ஹவுஸ் (White House) மலர்ச்சாலையிலும், 9 ஆம் திகதி காலை முதல் மதியம் வரை இளவாலை புனித யாகப்பர் ஆலயத்திலும், அன்று மாலை முதல் 11 ஆம் திகதி சனிக்கிழமை காலை வரை யாழ். ஆயர் இல்ல சிற்றாலயத்திலும் வைக்கப்பட்டு அன்று 11ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு யாழ். மரியன்னை பேராலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.


இவ்வறிவித்தலை குருக்கள், துறவிகள், இறைமக்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஆயர் இல்லம்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
அருட்பணி ப.யோ.ஜெபரட்ணம்
குருமுதல்வர்.

(CS 26872)A-1

## மரண அறிவித்தல்



### தம்பிப்பிள்ளை ஆறுமுகம்

(ஓய்வுபெற்ற நில அளவையாளர்)

சாவகச்சேரி சங்கத்தானையை பிறப்பிடமாகவும் சப்பச்சிமாவடியை வதிவிட மாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை ஆறுமுகம் அவர்கள் நேற்று (07.11.2023) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை அம்மாக்குட்டி தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற இராமலிங்கம் தங்கம்மா தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்றவர்க ளான அன்னலட்சுமி, நடேசபிள்ளை, மார்க்கண்டு ஆகியோரின் அன்புச் சகோதரனும், விமலாதேவியின் அன்புக் கணவரும், சங்கீதா, நிறஞ்சனா (நோர்வே), தேனுஜன் ஆகியோரின் தந்தையாரும், கிருஷ்ணகுமார், சிறீஸ்வரன் (நோர்வே) ஆகியோரின் மாமனாரும், யுரோஷிகா, நிலக்ஷன், டிரோசன், கவிசனா ஆகியோரின் பேரனும், சுசீலாதேவி தயாபரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.11.2023) புதன்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் சப்பச்சிமாவடியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுகொள்ளப்படுகின்றீர்கள்.

தகவல்: குடும்பத்தினர்.
077 512 7855

## மரண அறிவித்தல்

தோற்றம் 29 . 07 . 1942

மறைவு 07 . 11 . 2023



### கந்தையா சுப்பிரமணியம்

(ஓய்வுபெற்ற காங்கேசன்துறை சீமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர்)

சாயுடை, மாவிட்டபுரத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சுப்பிரமணியம் அவர்கள் நேற்று (07.11.2023) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா நாகமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை பொன்னுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், பூமணியின் பாசமிகு கணவரும், நடராசா காலஞ்சென்றவர்களான தங்கம்மா, சின்னத்துரை ஆகியோரின் சகோதரரும், இராசதுரை, பவளம் ஆகியோரின் மைத்துனரும், சறோசாதேவி (யா/கட்டுவன்புலம் மகா வித்தியாலயம், ஆசிரியர்), சகுந்தலாதேவி, சாரதாதேவி (அவுஸ்திரேலியா), கிருபாகரன் (ஜேர்மனி), பிரபாகரன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், குலசேகரம், இந்திரகுமார் (நிரு ஸ்ரோர்ஸ், மருதனார்மடம்), மகேந்திரன் (அவுஸ்திரேலியா), சோபா (ஜேர்மனி), அனுசியா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும், நிருஜன், விதுர்சிகன், யதுர்சிகன் (பிரான்ஸ்), சுஜன், லக்ஷன், லதன் (அவுஸ்திரேலியா), சரண்யா, சாரங்கா, சாகித்யா, சாருஜன், உஜானிக்கா, சகின், சைனிகா (ஜேர்மனி) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.11.2023) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மாவிட்டபுரம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப் படுகின்றீர்கள்.

சாயுடை, மாவிட்டபுரம்.

தகவல்: குடும்பத்தினர்.
021 224 2681

(CS 26873) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், நவ. 8

யாழ்ப்பாணம், நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தின் சண்முக விலாச மண்டபத்தில் எதிர்வரும் 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு சிவநெறிப் பிரகாசர், சமயஜோதி கதிர்காம நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் இடம்பெறவுள்ளது.

சிறப்புச்சொற்பொழிவை சைவப்புலவர் செ.கந்தசத்தி யதாசன் 'சூரன் போரும் நாமும்' என்னும் விடயப் பொருளில் ஆற்றவுள்ளார்.

இதேவேளை - தெல்லிப்பளை அருள்மிகு சிவகாமி அம்பாள் சமேத சந்திரமௌலீஸ்வரர் ஆலயப் பிரதான மண்டபத்திலும் எதிர்வரும் 10ஆம் திகதி சொற்பொழிவு இடம்பெறவுள்ளது. சொற்பொழிவை இளஞ்சைவப் புலவர் க.கைலநாதன் 'ஊர் ஊராகச் சென்று இறைவனை வெண்பாவால் புகழ்ந்து பாடிய நாயனார்' என்னும் விடயப்பொருளில் ஆற்றவுள்ளார். (ம)


### யா/சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி
# பழைய மாணவர் சங்கம்
# வருடாந்த பொதுக்கூட்டம்

**எதிர்வரும் 26.11.2023 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை - 9.00 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளது.**

அங்கத்தவர்கள் அனைவரையும் கலந்துகொள் ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். அங்கத்தவர்களின் பிரேரணைகள் ஏதாவது இருப்பின் 22.11.2023 ஆம் திகதிக்கு முன்பு செயலாளரிடம் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

செயலாளர்,
பழைய மாணவர் சங்கம்,
யா/சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி.

(cs.52782) (N.1)



# பாராட்டி வாழ்த்துகின்றோம்



சர்வதேச ஐக்கிய கலாம் நிறுவகத்தின் 2023 ஆம் ஆண்டிற்கான விருது வழங்கும் நிகழ்வில் விருதுபெற இந்தியா சென்ற வேளையில் மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தமிழக மாநில சட்டசபை பிரதிநிதி கௌரவ P. ஐயப்பன் (MLA) அவர்களால் 16.10.2023 அன்று மதுரை ஜெயராம் ஹோட்டலில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் யாழ்ப்பாணம் கோண்டாவிலைச் சேர்ந்த பிரபல சமூக சேவையாளரும் கல்விக் கொடையாளருமாகிய

## கலாநிதி இராசையா குவேந்திரநாதன்

அவர்களின் தன்னலங்கருதா சமூக சேவையினைப் **பாராட்டி அதி உயர் சமூக சேவையாளன் விருது** வழங்கி **கௌரவிக்கப்பட்டமையை** நாமும் பாராட்டுவதோடு அவரது சமூகசேவை மென்மேலும் தொடர வாழ்த்துகின்றோம்.

**ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் சனசமூக நிலையமும்**
**குமரன் விளையாட்டுக் கழகமும்**
**கோண்டாவில், கிழக்கு.**

(cr.40953) (N.1)


## அமைச்சருக்குரிய அதிகாரத்தை கொண்டே இடைக்கால நிர்வாகம்

*விளையாட்டுத்துறை அமைச்சர் விளக்கம்*

கொழும்பு, நவ.8

கிரிக்கெட் இடைக்கால நிர்வாகக் குழுவை நியமிக்க ஜனாதிபதி மற்றும் அமைச்சரவையின் அனுமதியைப் பெறுவதற்கான அவசியமில்லை என விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

தமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்துக்கு அமையவே, இடைக்கால நிர்வாகக் குழு நியமிக்கப்பட்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிறிலங்கா கிரிக்கெட்டின் பழைய நிர்வாகத்தை நீக்கி, ஏழு பேர் அடங்கிய புதிய இடைக்கால நிர்வாகக் குழுவொன்று விளையாட்டுத்துறை அமைச்சரால் நேற்றுமுன்தினம் நியமிக்கப்பட்டது. இந்த இடைக்கால நிர்வாகக் குழுவை நியமிப்பதற்கு முன்னர், தமக்குத் தெரியப்படுத்தப்படவில்லை என ஜனாதிபதி நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின்போது தெரிவித்திருந்தார். (எ-இ)

## விவசாயிகளுக்கு மானிய எரிபொருள்

கொழும்பு, நவ.8

சிறுபோக பயிர்ச்செய்கையின்போது பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு, பெரும்போகத்துக்காக எரிபொருளை மானியமாக வழங்குவதற்கு விவசாய அமைச்சு தீர்மானித்துள்ளது. இந்த விவசாயிகளுக்கு 17 ஆயிரம் ரூபா பெறுமதியான எரிபொருள் மானியமாக வழங்கப்படவுள்ளது என்று அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு உரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக வழங்கப்படும் 15 ஆயிரம் ரூபாவுக்கு மேலதிகமாக இந்த மானியம் வழங்கப்படவுள்ளது.

கடந்த காலங்களில் வறட்சியான காலநிலை காரணமாக 65 ஆயிரம் ஏக்கர் விவசாயக் காணிகள் பாதிக்கப்பட்டுள்ளன என்று விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது. (எ-இ)


# கேள்வி அறிவித்தல் / மீள் கேள்வி அறிவித்தல்
## கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு
## சபைநிதி 2022/2023

1. கரைதுறைப்பற்று பிரதேசசபையானது, சபை நிதியினை கீழ்க்காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத்திட்டங்களிற்காக பயன்படுத்த உத்தேசித்துள்ளது.
2. **தலைவர், பெறுகைக்குழு, கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு, வடமாகாணம்,** தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்குமுத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காக கோருகின்றார்.
3. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
4. கேள்விபெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் வீதி, கட்டுமானம் மற்றும் கட்டிட நிர்மாண துறையில் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவுகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.
5. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **செயலாளர், கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு. தொலைபேசி:-024-3243542 தெலைநகல்: 0212290001**இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலைநாட்களில் **21.11.2023** வரை காலை **09.00** மணிமுதல் மாலை **02.30** மணிவரை கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.
7. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் **செயலாளர், கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு** எனும் இடத்திலிருந்து **08.11.2023**ம் திகதியிலிருந்து **21.11.2023** வரை வேலை நாட்களில் **காலை 09.00** மணிக்கும் **மாலை 02.30** மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.**4000.00** செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
8. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து **செயலாளர், கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு** எனும் முகவரிக்கு **22.11.2023**ம் திகதி மாலை **02.30** மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படவேண்டும். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பெட்டியில் இடப்படல் வேண்டும். பிந்தியகேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்விநேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரரின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
9. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியில் இருந்து **77(எழுபத்துஏழு–06.02.2024)**நாட்கள் வரையும் செல்லுபடியாகும்.
10. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையில் காட்டப்பட்டவாறு அமையும்.

| இல | ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (Mn) (VAT நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| 1 | NP/14/44(1)/02/03/C.F/ Capital/13/2022/2023 | புளியங்குள வீதி புனரமைப்பு, முல்லையூர் (சபைநிதி) (மீள்கேள்வி கோரல்) | 1.304 | 63 நாட்கள் | C9/C8 (வீதி) | 13000.00 | 04.03.2024 |
| 2 | NP/14/44(1)/02/03/C.F/ Capital/15/2022/2023 | ஹிஜ்ராபுரம் உள்ளக வீதி 1ஆம் குறுக்குத்தெரு புனரமைப்பு (சபைநிதி) (மீள்கேள்வி கோரல்) | 1.739 | 63 நாட்கள் | C9/C8 (வீதி) | 18000.00 | 04.03.2024 |
| 3 | NP/14/44(1)/02/03/C.F /Capital/08/2022/2023 | யாழ் வீதி புனரமைப்பு, அளம்பில். (சபைநிதி) (மீள்கேள்வி கோரல்) | 1.739 | 63 நாட்கள் | C9/C8 (வீதி) | 18000.00 | 04.03.2024 |
| 4 | NP/14/44(1)/02/03/C.F/ Capital/20/2022/2023 | முல்லைத்தீவு பொதுச்சந்தை புனரமைப்பு(சபைநிதி) | 0.869 | 63 நாட்கள் | C9/C8 (கட்டடம்) | 9000.00 | 04.03.2024 |
| 5 | NP/14/44(1)/02/03/C.F/ Capital/21/2022/2023 | கரைதுறைப்பற்று பிரதேசசபையின் தலைமை அலுவலகத்திற்கான குளிரூட்டி கொள்வனவு மற்றும் பொருத்துதல் | 1.150 | 35 நாட்கள் | வடமாகாணத்தில் உரிய பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும். | 12000.00 | 04.03.2024 |
| 6 | NP/14/44(1)/02/03/C.F/ Capital/22/2022/2023 | கரைதுறைப்பற்று பிரதேசசபையின் தலைமை அலுவலகத்திற்கான பெயர்ப்பலகை கொள்வனவு மற்றும் பொருத்துதல் | 0.700 | 35 நாட்கள் | வடமாகாணத்தில் உரிய பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும். | 7000.00 | 04.03.2024 |

11. கேள்விகோரல் பற்றிய முன்னோடிக் கூட்டம் 14.11.2023 ஆம் திகதி பி.ப 10.00 மணிக்கு **கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு** அலுவலக மகாநாட்டு மண்டபத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்த செலவில் கலந்து கொள்ளமுடியும்.
12. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை முழுமையாக அல்லது பகுதியாக நிராகரிக்கவோ, மீள்கேள்வி கோரவோ பெறுகைக்குழுவிற்கு அதிகாரம் உண்டு.

தலைவர்,
உள்ளூர் அதிகார பெறுகைச்சபை,
கரைதுறைப்பற்று பிரதேசசபை,
முல்லைத்தீவு.
**08.11.2023**

(CR 40955) A-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். தாயின் விருப்பங்களை நிறைவேற்றி மகிழ்வீர்கள். வீண் பிரச்சினைகளும் செலவுகளும் ஏற்படக்கூடும்.

**இடபம்:** புதிய முயற்சிகளைத் தொடங்குவது சாதகமாக முடியும். உறவினர்களால் குடும்பத்தில் சில சங்கடங்கள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவும் இருக்காது. மகிழ்ச்சி தரும் செய்தி கிடைப்பதற்கான வாய்ப்பு உண்டு.

**மிதுனம்:** மகிழ்ச்சியான நாள். மனதில் தைரியம் அதிகரிக்கும். எடுத்த காரியத்தைச் சிறப்பாகச் செய்து முடிப்பீர்கள். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். பிணக்குகள் நீங்கும். மகிழ்ச்சி கிடைக்கும்.

**கடகம்:** முயற்சிகள் சாதகமாக முடியும். சங்கடங்கள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவுமிருக்காது. சகோதரர்களால் செலவுகள் ஏற்படும். பணவரவுக்கு வாய்ப்பு ஏற்படும். செலவு செய்ய நேரிடும்.

**சிம்மம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். உங்கள் முயற்சிக்கு ஆதரவு கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். ஆதாயம் உண்டாகும்.

**கன்னி:** பணவரவு திருப்தி தரும். தாயின் உடல்நலனில் கவனம் தேவை. எதிர்பாராத செலவுகள் ஏற்படும். குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். சில சங்கடங்கள் ஏற்படக்கூடும். உறவினர்களுக்காக செலவு செய்ய நேரிடும்.

**துலாம்:** மனதில் உற்சாகம் ஏற்படும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடிவதற்கு வாய்ப்பு ஏற்படும். அனுசரணையாக நடந்துகொள்ளவும்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். செலவு செய்ய நேரிடும். மற்றவர்களுடன் வீண் விவாதத்தில் ஈடுபட வேண்டாம். அனுசரித்துச் செல்வது நல்லது.

**தனுசு:** வழக்கமான பணிகளில் மட்டுமே ஈடுபடவும். உற்சாகம் அதிகரிக்கும். விறுவிறுப்பாகவும் பரபரப்பாகவும் செயற்படுவீர்கள். சுபநிகழ்ச்சிக்கான பேச்சு சாதகமாக முடியும்.

**மகரம்:** எதிர்பாராத பணவரவு இருந்தாலும் திடீர்ச் செலவுகளும் ஏற்பட்டு திக்கு முக்காட வைக்கும். எதிர்பார்த்த காரியம் இழுபறியாகும். மன வருத்தம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. தேவையற்ற செலவுகள் ஏற்படக்கூடும்.

**கும்பம்:** உற்சாகமான நாள். காரியங்கள் அனுகூலமாகும். உங்கள் பொறுப்புகளை வாழ்க்கைத்துணையிடம் பகிர்ந்துகொள்வது ஆறுதலாக இருக்கும். ஏற்பட்டிருந்த மன வருத்தங்கள் நீங்கும்.

**மீனம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். சிலருக்கு சகோதரர்களால் எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. மூன்றாவது நபர்களின் தலையீடு காரணமாகக் குடும்பத்தில் ஏற்பட்ட குழப்பங்கள் நீங்கும்.

## பண்பாட்டுப் பெருவிழா தென்மராட்சியில் இன்று

தென்மராட்சிப் பிரதேச பண்பாட்டுப் பெருவிழா இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு சாவகச்சேரி சிவன் கோவில் வீதியிலுள்ள கலைமன்ற கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச செயலர் திருமதி உஷா சுபலிங்கம் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ். மாவட்டச் செயலர் அ.சிவபாலசுந்தரன், சிறப்பு விருந்தினராக மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் திருமதி லாகினி நிருபராஜ் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர்.

நிகழ்வில் பிரதேச இலக்கியப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்குப் பரிசில்கள் வழங்கல் நிகழ்வு இடம்பெறும்.

தொடர்ந்து பிரதேசத்தில் கலைப் பணியாற்றிய திருமதி புனிதகுமாரி ஈழநேசன், க. தர்மராஜா, பா.பஞ்சமூர்த்தி, சி. நாகராசா ஆகியோருக்குப் பிரதேசத்தின் இந்த ஆண்டுக்குரிய உயரிய விருதான 'கலைசாகரம்' விருதும், லஜந்தா குணாளன், தெ. சிந்துஜன், நி.ஹரன் ஆகியோருக்கு 'இளங்கலைஞர்' விருதும் வழங்கப்படவுள்ளன. (ச- 9,159)

## மருந்தகத்துக்கு மருந்தாளர் தேவை

***Pharmacist***

இலங்கை மருத்துவ சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட சான்றிதழ் வைத்திருக்கும் மருந்தாளர் தேவை.

**(ஓய்வுபெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்)**

சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.

**யாழ்ப்பாணத்தில் இருப்பவர்களும் / இருபாலாரும்** விண்ணப்பிக்கலாம்.

**ஓய்வுபெற்றவர்கள் பெரிதும் விரும்பத்தக்கது.**

**075 468 4153**

## ஆட்கள் தேவை

அச்சுவேலி கைத்தொழில் பேட்டையில் இயங்கி வரும் எண்ணை உற்பத்தி தொழிற்சாலையான **Venkadeshwara Agro Industry (PVT) Ltd** யில் பின்வரும் பதவிகளுக்கு ஆட்கள் தேவை.

கணக்காளர் (பெண்)
ஆய்வக உதவியாளர் (பெண்)

ஆர்வம் உள்ளவர்கள் தங்கள் சுயவிபரக்கோவையை **suganthon@gmail.com** எனும் மின்னஞ்சலுக்கு சமர்பிக்கவும்.

# கேள்வி அறிவித்தல் - 2024
## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க் குறிப்பிடப்படும் பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகள் மற்றும் சிற்றுண்டிச்சாலை என்பவற்றை 2024.01.01ஆம் திகதி தொடக்கம் 2024.12.31ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றது.

| | |
|---|---|
| கேள்விப்பத்திரம் வழங்கப்படும் காலம் | : 2023.11.08 தொடக்கம் 2023.11.21 வரை அலுவலக நாட்களில் மு.ப.9.00 பி.ப. 3.00 மணி |
| கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி | : 2023.11.22 மு.ப.10.00 மணி வரை |
| கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி | : 2023.11.22 மு.ப.10.00 மணி |

1. கேள்விப்பத்திரங்கள் 02 பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதி உட்பட 02 பிரதிகளையும் "செயலாளர், வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை மானிப்பாய்" என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு உரிய காலப்பகுதிக்கு முன் பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது அதற்கெனத் தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடுதல் வேண்டும்
2. கேள்விப்பத்திரம் பெற விரும்புவோர் விண்ணப்பங்களுடன் தேசிய அடையாள அட்டையும் அதன் நிழற்படப்பிரதியையும் கொண்டு வருவதுடன் கிராம அலுவலரால் வழங்கப்பட்ட வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. உள்ளூராட்சி மன்றங்களால் தவறுநராகக் கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரம் வழங்கப்படமாட்டாது. புடிவம் வழங்கப்பட்ட பின் கண்டுபிடிக்கப்பட்டால் அவரின் கேள்விப்பத்திரம் நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
4. ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
5. உரிய காலத்தில் சமர்ப்பிக்கப்படாத கேள்விகள் இரத்துச் செய்யப்படும்.
6. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தலுக்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை நிராகரிக்கவும் எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.
7. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது அவரது பிதிநிதியோ சமூகமளிக்கலாம்.
8. மாத வாடகையானது விலை மதிப்பீட்டுத் திணைக்கள மதிப்பீட்டின் பிரகாரம் அறவிடப்படும்.
9. அரசாங்கத்தினால் காலத்திற்கு காலம் விதிக்கப்படும் வரியினை செலுத்துதல் வேண்டும்.
10. சித்தியடையும் கேள்விதாரர் கேள்வித் தொகையின் 1/3 பகுதியை குறிப்பிடப்படும் காலப்பகுதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினை செய்து கொள்ள வேண்டும்.
11. கேள்விப்பத்திரங்களை தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்வதுடன் கேள்வி சம்பந்தமான மேலதிக விபரங்களை தலைமை அலுவலகத்திலும் உப அலுவலகங்களிலும் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.


| இல | விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம் | மீளளிக்கப்படும் கேள்விவைப்புப் பணம் | ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த தொகை | மாதாந்த வாடகை |
|---|---|---|---|---|---|
| **மானிப்பாய் பட்டின உப அலுவலகம்** | | | | | |
| 1 | மானிப்பாய் பொதுச் சந்தை, (மரக்கறிச்சந்தை, மீன்சந்தை வாகன பாதுகாப்பு மற்றும் பொதுமலசலகூடம் உள்ளடங்கலானது) | 1,000.00 | 30,800.00 | 3,081,200.00 | - |
| 2 | மானிப்பாய் பொதுச்சந்தை கோழியிறைச்சிக்கடை | 1,000.00 | 2100.00 | 213,400.00 | 600.00 |
| 3 | மானிப்பாய் பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 18,000.00 | 1,804,600.00 | 600.00 |
| 4 | மானிப்பாய் பொதுச்சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 800.00 | 82,500.00 | 600.00 |
| **மானிப்பாய் கிராம உப அலுவலகம்** | | | | | |
| 1 | காக்கைதீவு மீன் சந்தை (மேற்கு பகுதி புதிய கட்டடம்) (வாகன பாதுகாப்பு மற்றும் பொதுமலசலகூடம் உள்ளடங்கலானது) | 1,000.00 | 8,300.00 | 830,000.00 | - |
| 2 | நவாலி பிரசாத் சந்தை | 1,000.00 | 2,000.00 | 194,300.00 | - |
| 3 | நவாலி பிரசாத் சந்தை கோழியிறைச்சிக்கடை | 500.00 | 800.00 | 24,800.00 | 300.00 |
| 4 | நவாலி பிரசாத் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 4,700.00 | 468,600.00 | 400.00 |
| 5 | சாவற்கட்டுச் சந்தை | 1,000.00 | 3,000.00 | 305,000.00 | - |
| 6 | மானிப்பாய்சிறுவர்பூங்காசிற்றுண்டிச்சாலை (தற்காலிகம்) | 1,000.00 | 2,600.00 | 253,000.00 | - |
| **பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகம்** | | | | | |
| 1 | பண்டத்தரிப்பு பொதுச்சந்தை | 1,000.00 | 37,000.00 | 3,696,000.00 | - |
| 2 | பண்டத்தரிப்பு பொதுச்சந்தை கோழியிறைச்சிக்கடை | 1,000.00 | 4,600.00 | 462,100.00 | 2,250.00 |
| 3 | பண்டத்தரிப்பு சாந்தைச் சந்தை | 1,000.00 | 6,900.00 | 690,300.00 | - |
| 4 | பண்டத்தரிப்பு பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 17,700.00 | 1,772,000.00 | 2,250.00 |
| 5 | பண்டத்தரிப்பு சிறுவர் பூங்கா சிற்றுண்டிச்சாலை | 1,000.00 | 100.00 | 9,800.00 | - |
| **பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகம்** | | | | | |
| 1 | மாகியபிட்டி பொதுச் சந்தை | 1,000.00 | 3,400.00 | 342,100.00 | - |
| 2 | மாகியபிட்டி பொதுச் சந்தை கோழியிறைச்சிக்கடை | 1,000.00 | 1,300.00 | 132,000.00 | 800.00 |
| 3 | இளவாலை பொதுச் சந்தை | 1,000.00 | 2,200.00 | 223,600.00 | - |
| 4 | இளவாலை பொதுச் சந்தை கோழியிறைச்சிக்கடை | 1,000.00 | 600.00 | 61,200.00 | 1,000.00 |
| 5 | மாதகல் பொதுச் சந்தை | 1,000.00 | 3,000.00 | 330,000.00 | - |
| 6 | மாதகல் பொதுச் சந்தை கோழியிறைச்சிக்கடை | 500.00 | 300.00 | 31,700.00 | 750.00 |
| 7 | மாதகல் பொதுச் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 2,600.00 | 259,800.00 | 750.00 |
| 8 | இளவாலை மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 3,000.00 | 295,700.00 | 1000.00 |
| 9 | மாகியபிட்டி பொதுச் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 4,700.00 | 468,100.00 | 800.00 |

**செயலாளர்,**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.**

**திகதி: 08.11.2023**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரராசசேகரம் கூறும் சலக்கழிச்சல் என்னும் நீரிழிவு!



சித்தமருத்துவர்
தியாகராஜா சுதர்மன்
BSMS, PG. Dip. in. Food & Nutrition
மானிப்பாய்

சித்தமருத்துவத்தில் மேகம் அல்லது சலக்கழிச்சல் என்னும் நோய்க்கு நீரிழிவு என்னும் பெயர் ஆனது கி.பி. 18 - 19 ஆம் நூற்றாண்டுகளிலேயே ஏற்பட்டதொன்றாகும். ஆரம்பத்தில் மேக ரோகம் என்று அழைக்கப்பட்டாலும் கி.பி. 15 ஆம் நூற்றாண்டளவில் அந்நியரின் வருகையுடன் மேகரோகத்தில் பால்வினை நோய்களும் சேர்க்கப்பட்டன. பால்வினை நோய்கள் (பிறமேக வேறு வகையான) பிறமேக நோய்கள் பிரமேகம் எனவும், நீரிழிவானது சிறுநீரில் அதிகளவு இனிப்பு (குளுக்கோஸ்) இருப்பதால் மதுரச் சுவையை (இனிப்புச் சுவை) அடிப்படையாகக்கொண்டு மதுமேகம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. சித்தமருத்துவ நூல்களில் மதுமேகம், சலக்கழிச்சல், சலரோகம், மேகநீர், மிகுநீர், வெகுமூத்திரம், நீர்ப்பாடு, இனிப்புநீர், தித்திப்புநீர் எனப் பலவித பெயர்களில் நீரிழிவானது குறிப்பிடப்படுகின்றது. குறிப்பாக யாழ்ப்பாண நூல்களில் நீரிழிவு, சலக்கழிச்சல், சலரோகம், மதுமேகம் சில நூல்களில் அதன் குறிகுணங்களில் ஒன்றான தாகம் என்பதையும் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறு குறிப்பிடப்படும் பொழுது குறிப்பிட்ட உபத்திரவம் உள்ள போது மட்டுமே அவ்வுணவையோ அல்லது மருந்தினையோ பயன்படுத்தல்வேண்டும் என்பதே இங்கு கருத்தில் எடுக்கவேண்டும். தாகம் என்பது நீரிழிவில் முக்கியமானதொரு குறிகுணம் ஆகும். அதனாலேயே சித்தமருத்துவத்தில் காணப்படுகின்ற 20 வகையான நீரிழிவு வகைகளில் "தாகமேகம்" என ஒன்று காணப்படுகின்றது.

மேலைத்தேசத்தில், 15 ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலப்பகுதியில் கிரேக்கமருத்துவர் அரேறஸ் (Areatus) என்பவர் நீரிழிவு ஏற்பட்ட ஒருவர் உடல் மெலிந்து செல்வதாலும், அதிகளவு சிறுநீர் வெளியேறுவதாலும் நீரிழிவுக்கு ' Diabetes' எனப் பெயரிட்டார். இதன் கிரேக்க அர்த்தம் "உடலிலிருந்து வெளியேறல்" எனப் பொருள்படும்.

17 ஆம் நூற்றாண்டில் இலத்தீன் சொல்லான 'Mellitus' என்பது 'Diabete's உடன் இணைந்து 'Diabetic mellitus' என்ற பெயரானது. இங்கு 'Mellitu's என்ற சொல் இலத்தீனில் தேனைக் குறிக்கும். அதாவது அதிகளவில் வெளியேறும் சிறுநீரில் குளுக்கோஸ், இனிப்புச் சுவை கொண்டிருப்பதனால் இந்தப்பெயர் உருவானது.

எனினும் நவீன விஞ்ஞானத்தின் ஆரம்பகாலம் வரை நீரிழிவுக்கான காரணம் புதிராகவும் மர்மமாகவுமே விஞ்ஞானிகளுக்கு இருந்துள்ளது.

இவ்வாறு நீரிழிவுக்கான காரணம் தெளிவற்று இருந்தமையால் இக்காலம் "நீரிழிவின் இருண்ட காலம்" என அழைக்கப்பட்டது. இந்தக்காலப்பகுதியில் நோயாளிகளின் வாழ்க்கைக் காலம் குறுகியதாகக் காணப்பட்டது. நீரிழிவு நோயாளிகளுக்கு அரைப்பட்டினி போன்ற உணவுக் குறைப்புகள், கொழுப்பு அதிகமுள்ள உணவுகள் வழங்கல் என பல செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

இந்நிலையில், 1869 இல் ஜேர்மனிய இளம் மருத்துவரான Paul Langerhans என்பவரால் சதையி என்னும் சுரப்பியில் (Pancreas) சிறிய சிறிய தீவுபோன்ற கலங்கள் அவதானிக்கப்பட்ட போதும் அவற்றின் தொழிற்பாடுகள் தொடர்பில் விளங்கிக்கொள்ள முடியாதிருந்தது. ஆனாலும் இச்சிறிய தீவுகளைப் போன்ற கலங்களுக்கு இவற்றினைக் கண்டுபிடித்த இளம் கண்டுபிடிப்பாளரின் பெயரைச் சூட்டிக் கொண்டார்கள். இதனால் இத்தீவுகள் இவரது பெயரில் லங்ககான் சிறுதீவுகள் (Islands of Langerhans) என அழைக்கப்பட்டன.

1922 இல் கனேடிய விஞ்ஞானிகளான Frederick Banting மற்றும் Charles Best என்பவர்களால் லங்ககான் சிறுதீவுகளில் இருந்து சுரக்கப்படும் இன்சுலின் (Insulin) எனப்படும் ஓமோன் , குருதியில் உள்ள குளுக்கோஸின் ஒட்சியேற்றத்திலும், குளுக்கோஸில் இருந்து வெப்பம் மற்றும் உடற்கலங்களுக்குத் தேவையான சக்தி என்பன உருவாக்கத்திலும் பிரதான பங்கு வகிக்கின்றது என்பது கண்டறியப்பட்டது. விஞ்ஞானியான Frederick Banting என்பவரின் பிறந்த நாளே நீரிழிவு தினமாக நவம்பர் 14 பிரகடனப்படுத்தப்பட்டு, நவம்பர் மாதம் நீரிழிவு மாதமாகவும் நீரிழிவு தொடர்பான விழிப்புணர்வு மாதமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த இன்சுலின் ஓமோனின் குறைபாட்டினால் குளுக்கோஸின் அனுசேபத்தில் ஏற்படும் குழப்பம் காரணமாக குருதியில் உள்ள குளுக்கோஸானது அதிகரித்துக் கொள்கின்றது. அதாவது குளுக்கோஸினை உடற்கலங்களால் தமது தேவைக்குப் பாவிக்கமுடியாது அது குருதியில் தேங்கி அதிகரிப்பதுடன் சிறுநீருடனும் வெளியேறுகின்றது. இதனால் உடலில் ஏற்படும் குழப்பங்களும் அவற்றினால் ஏற்படும் உபாதைகளுமே நீரிழிவு எனப்படுகின்றது.

இன்சுலின் கண்டறியப்படும் வரை காணப்பட்ட நீரிழிவுக்கான உணவு முறையானது அதிகளவு கொழுப்பை அடிப்படையாகக் கொண்டதால் நோயாளிகள் மாரடைப்பின்மூலம் இறக்க நேரிட்டது. ஆனால் இன்சுலின் கண்டறியப்பட்ட பின்னர் உணவுமுறையிலும் மாற்றம் உருவாகி சிறந்த முறையில் நீரிழிவு தொடர்பான பராமரிப்புகளும் பேணப்பட்டு வருகின்றன.

சித்தமருத்துவம் நீரிழிவு தொடர்பில் அது உண்டாவதற்கான காரணங்களைக் கூறி அவற்றினைத் தவிர்த்து நோயணுகாது ஆரோக்கியத்தை பேணச் சொல்கின்றது. குறிப்பாக உணவு, உள, உடற்பயிற்சி தொடர்பான விழிப்புணர்வு பற்றி தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. அதேபோல் ஏற்படும் நீரிழிவை வகைப்படுத்தி அவற்றுக்கான பராமரிப்புகள், உணவு முறைகள், மருந்துகள் என்பவற்றையும் கூறியிருக்கின்றது. எனினும் நவீன விஞ்ஞான முறையிலான பரிசோதனைகள் என்பவற்றின் மூலம் நோயின் தன்மையறிந்து மருத்துவர்களின் ஆலோசனையுடன் நீரிழிவை முகாமை செய்வதே ஆரோக்கியமானது.

யாழ்ப்பாண நூலான பரராசசேகரம், செகராசசேகரம் மற்றும் சித்தமருத்துவ நூல்கள் நீரிழிவு தோன்றக் கூறும் காரணங்கள் பின்வருமாறு காணப்படுகின்றன.

" மாதர் மயக்க மிகுதியினான் மதியி லச்ச மிகுதலினால்
போதை தருங்கள் எருந்துதலாற் புலான்மீனிறைச்சி நெய்பாலால்
சீத வுணவாற் பதனிழந்த தீனை விரும்பித்தின்பதனால்
ஓது முணவின் மேலுணவா லுடம்பு மிகவும் பருத்தலினால்"

"அருந்து முணவிலிப்பதிக மாக வுறலா லிராக்காலம்
பொருந்து முறக்கந் தவிர்தலினாற் புசிப்புக்குறைவான் மிகுதியினால்
திருந்து மடவார் போகமற விடலான் மிகலாற் றேகமிக
வருந்த வெயிலின் மிகுநடையால் வந்து தோன்றும் பலமேகம்"

பரராசசேகரம்

"கட்டளை ஊணில்மிஞ்சில் குறைந்திடில் காலந்தப்பில்
விட்டிடு நெய்யும்பாலும் இரசமும்புளிப்புமிஞ்சில்
மட்டறு குழலினார்தன் மயக்கினிலுறுதி செய்யில்
நெட்டுறு கோடைதட்டில் நீரிழிவாகுமென்னே"

செகராசசேகரம்

"நீரிழிவு பற்றுவதின் காரணத்தை
நீனிலத்தில் நிகழித்தக் கேளீர்
சீருலவு பதார்த்தமிகுத் தருந்தலினால்
விழுத்தடிகள் தின்று நாளம்
சேருதலால் சிறுவழுது ணங்காயைப்
பொசித்தலால் தண்ணீர்ப் போத
வாரியருந் தலினாலும் உவர்த்தரை நீர்
பலநாளும் அருந்த லாலும்

பசிவேளை நீங்கிஉண வருந்திடலால்
தீரிபோகப் பற்றி நாளும்
முசியாது செய்கையால் உடம்பிழல்
மிகுதலினால் முன்செய் கன்மம்
கசிவாகிச் சேர்த லினால் உடம்புமிகத்
தூலமாய்க் காண லாலும்
நசியாமல் மனத்திலுற்ற பதார்த்தலிரும்
புதலாலும் நாடுந் தானே

நாள்தோ றன் ம் மறுத்திடலால்
நாணக் குழல ர் மேலாசை
வேள்தான் வ ருந்த இரவுபகல்
விரும்பல் செ யலால் மிகுமுழலை
கள் சேர் நெஞ்சு தனையலர்த்தி
காயம் உதிரங் கருதிடலால்
தாழ்வே செய்யும் மூல அங்கி
நிலைபேர்ந் துடல்மேற் சார்ந்திடுமே
மேகவாகடத் திரட்டு

மேற்கூறப்பட்ட பாடல்களில் நீரிழிவு தோன்றக் கூறப்படும் காரணங்களின் தொகுப்பு கீழ்வருமாறு காணப்படும்.

1. மாப்பொருள் பதார்த்தங்களை அதிகமாக உண்பது.
2. இதனால் உடலில் கொழுப்பு உடலில் அதிகரித்தல்
3. கத்தரிக்காய் அதிகம் உண்பது
4. உணவு வகைகளை அதிகம் விரும்பி உண்ணல்.
5. இறைச்சி, மீன், நெய், பால் என்பவற்றை அளவுக்கதிகமாக உண்ணல்.
6. பழைய, நன்கு சமைக்கப்படாத உணவுகளை அதிகம் விரும்பி உண்ணல்.
7. அதிகம் புளிப்புச் சுவையை விரும்பி உண்ணல்.
8. பொதுவாக உணவு ஒழுங்கில் அளவில் (மிகுதல்/ குறைதல்) காலம் தவறுதல்.
9. மலினமான (சுத்தமற்ற), உவர் நீர் என்பவற்றை நீண்ட காலம் அருந்துதல்
10. உடல் உழைப்பற்று (உடற்பயிற்சியின்மை) அதி உடற்பருமன் ஏற்படல்.
11. உளரீதியான அச்சம் உளநெருக்கீடு
12. அளவுக்கு மீறிய, உணவினைக் கவனியாது தாம்பத்தியம்.
13. பசிக்கும்போது உண்ணாதிருத்தல். வேளை தவறி உணவருந்துதல்.
14. முன்னோர்களின் கன்மம் பரம்பரை
15. போதிய உறக்கம் இன்மை.
16. உடல் வருந்த கோடை வெயிலில் அதிகமாக திரிதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்துக்கு இணையத்தளம்

யாழ்ப்பாணம், நவ.8

தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்துக்கு இணையத்தள சேவை ஆரம்பித்துவைக்கப்பட்டுள்ளது.

ஆலயத் தலைவர் செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன் நேற்று செவ்வாய்க்கிழமை இந்த இணையத்தளத்தை ஆரம்பித்து வைத்தார்.

இதனூடாக உலகெங்கிலுமுள்ளவர்கள், ஆலயத்தில் இடம்பெறும் பூசைகள், நிகழ்வுகள் மற்றும் சமூக நலத்திட்டம் தொடர்பான முழுமையான விவரங்களை அறிந்துகொள்ள முடியும் என்பதுடன் சமூக நலத்திட்டங்கள் தேவைப்படுவோருக்கு உரிய முறையில் திட்டங்கள் சென்றடையவும் இது பயனாற்றும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(ச-27-66)


**கோண்டாவில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)**

**வெளிவாரி விண்ணப்பம் கோரல் இடைநிறுத்தப்பட்டுள்ளது**

எமது சங்கத்தின் கிராமியவங்கி முகாமையாளர் கிராமியவங்கி எழுதுனர் ஆகிய பதவிகளுக்கு உதயன் பத்திரிகையில் 03.11.2023 ஆம் திகதி பிரசுரிக்கப்பட்டுள்ள பதவி வெற்றிடம் அறிவித்தல் தவிர்க்க முடியாத காரணத்தால் இடைநிறுத்தப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருகின்றோம்.

பொது முகாமையாளர்.

CR 40554A-1


## மரண அறிவித்தல்

மண்ணில் 02 . 03 . 1976



விண்ணில் 25 . 10 . 2023

**திரு.வல்லிபுரம் ஜெகதீஸ்வரன்**

(யாழ். கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம், யாழ். சாவகச்சேரி இந்துக் கல்லூரி பழைய மாணவன், யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ பட்டதாரி. பேராதனை பல்கலைக்கழக, Edinburgh,Scotland. UK பல்கலைக்கழக பட்டதாரி. (முல்லைத்தீவு மாவட்ட செயலகம் நெடுங்கேணி பிரதேச செயலகம், வவுனியா மாவட்ட செயலகம் முன்னாள் அபிவிருத்தி உத்தியோகத்தர்)

கெற்பேலியை பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் ஜெகதீஸ்வரன் அவர்கள் 25.10.2023 புதன்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் வல்லிபுரம் மற்றும் காலஞ்சென்ற கனகம்மா தம்பதிகளின் இளைய மகனும் திரு.திருமதி.தேவராசா தம்பதியின் அன்பு மருமகனும் யசோதராவின் அன்புக்கணவரும், கனகநாயகம், ரவீந்திரன், ரஞ்சினி, ஜோதீஸ்வரன்(கனடா) ஆகியோரின் அன்பு சகோதரனும், அனன்யாவின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.11.2023) வியாழக்கிழமை லண்டன் லிவர்பூலிலுள்ள எவர்டன் உதைபந்தாட்ட மைதானத்தில் இடம்பெற்று சென் ஹேலன்ஸ் மயானத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு, வல்லிபுரம்(அப்பா)
வ.ரவிந்திரன்-0777563313
வ.ஜோதீஸ்வரன்-+15145507343(கனடா)
காந்தன்.+447736641894(லண்டன்)
யசோதரா-+447460903208(லண்டன்)

தகவல்: வ.கனகநாயகம் (செல்வம்)
0770711790, 0776171965
(தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை- யாழ்ப்பாணம்)

(CS 26876)A-1

## காணவில்லை



இல. 465/A, சிவலிங்கப்புளியடி கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த

**பத்மாவதி இந்திரலிங்கம்**

அவர்கள் நேற்று (07.11.2023) செவ்வாய்க்கிழமை பிறபகல் 1.00 மணியளவில் மஞ்சள் நிற உடையணிந்த (70 வயது) மனநிலை பாதிக்கப்பட்ட முதியவர் ஒருவரைக் காணவில்லை. காண்பவர்கள் கீழ்வரும் தொலைபேசி எண்ணிற்கு தகவல் தருமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**077 0864 155**
**077 9597 347**

(CS 26874)A-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 20 . 07 . 1946



மறைவு 07 . 11 . 2023

**பொன்னம்பலம் பாலச்சந்திரன்**

காங்கேசன்துறையை பிறப்பிடமாகவும், கொடிகாமத்தினை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் பாலச்சந்திரன் அவர்கள் நேற்று (07.11.2023) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், சுப்பிரமணியம் மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், பரமானந்ததேவியின் அன்புக் கணவரும், தமிழ்ச்செல்வி (ஆசிரியர், யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி), தமிழ்ப்பிரியா (ஆசிரியர், யா/டிறிபேக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவநேசன் (செலிங்கோ காப்புறுதி நிறுவன முகாமையாளர், சாவகச்சேரி), சுதன் (யா/வரணி மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமனாரும், சிவப்பிரிந்தன், பிரணவி, யஸ்மிதா ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்ற பத்மநாதன், கமலநாதன், யோகநாதன் மற்றும் மனோறஞ்சிதமலர், விமலநாதன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.11.2023) புதன்கிழமை மு.ப. 10.30 மணியளவில் கொடிகாமத்தில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பாலாவித்தாள் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

V.C. ஒழுங்கை.
கச்சாய் வீதி, கொடிகாமம்.
தொடர்புகளுக்கு: 077 308 6879
077 655 1774

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



**கதிரவேல் அருளானந்தன் (அம்பலவாணர்)**

(ஓய்வுநிலை சாரதி பயிற்றுவிப்பாளர் இ.போ.ச.
உபபோசகர் - மல்லாகம் பழம்பதி தேவஸ்தான சபை)

மல்லாகம் பாடசாலை ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட கதிரவேல் அருளானந்தன் அவர்கள் நேற்று (07.11.2023) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரவேல் பரிபூரணம் தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற சபாபதிப்பிள்ளை கனகசபாபதியின் பெறாமகனும், காலஞ்சென்றவர்களான சதாசிவம் (சின்னக்குழந்தை), சச்சிதானந்தன் (சச்சி மாஸ்டர்), சொக்கநாதன் (சொக்கர்), சபாபதிப்பிள்ளை, கௌரி, விக்கினேஸ்வரன் மற்றும் செல்வராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான சரவணபவன், சோமசுந்தரம், அகிலேஸ்வரி, தியாகராசா, சண்முகசுந்தரம் மற்றும் கோபாலகிருஷ்ணன் ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரனும் சிவனேஸ்வரி, காலஞ்சென்றவர்களான தேவமனோகரி, அகிலேஸ்வரன் ஆகியோரின் மைத்துனரும், பகீரதி, ஹரிராம், சிவரூபன் சந்திராணி ஆகியோரின் அன்பு மாமனும், சிவகௌரி, கண்ணன், ரஜனி, ஜிகான் டெபி ஆகியோரின் பெரியதந்தையும், பிரியங்கா, கோபிகா, சுஜன், அஸ்வின், மாயா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.11.2023) புதன்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுகொள்ளப்படுகின்றீர்கள்.

பாடசாலை ஒழுங்கை,
மல்லாகம்.

தகவல்:
திருமதி அ.செல்வராணி (சகோதரி)
திரு.சோ.பிரணவரூபன்
திரு.தி.பிரபாகரன் } (பெறாமக்கள்)

(CS 26877) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறைவேற்று அதிகாரத்தை ஒழித்து மக்களாணையில் புதிய அரசாங்கம்

## ஜே.வி.பி. வலியுறுத்து

கொழும்பு, நவ.8

**நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கப்படும் நாளில் நாடாளுமன்றமும் கலைக்கப்படுமாயின் அதற்கு நாம் ஆதரவே. அவ்வாறில்லையெனில் அதனை நாம் தோற்கடிப்போம் என்று ஜே.வி.பி.கட்சி தெரிவித்துள்ளது.**

இதுதொடர்பில் ஜே.வி.பி.யின் செயலாளர் நாயகம் ரில்வின் சில்வா தெரிவிக்கையில்;

உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் மற்றும் மாகாணசபைத் தேர்தல் என்பன ஒத்திவைக்கப்பட்டதுபோன்று தந்திரம் வகுத்து ஜனாதிபதித் தேர்தலையும் பிற்போடப்படலாம் என்று அரசாங்கம் முயற்சிக்கிறது. இதற் குச் சாத்தியமில்லை. ஜனாதிபதித் தேர்தல் கட்டாயம் நடத்தப்படவேண்டும். உள்ளூராட்சிச்சபைகள் மற்றும் மாகாணசபைகளில் மக்கள் பிரதிநிதிகள் இல்லாதபோதிலும் அவற்றை நிர்வகிப்பதற்கு அரசமைப்பில் ஏற்பாடுள்ளது. நாடாளுமன்றத் தேர்தல் விவகாரத்தில் இந்த அணுகுமுறை பொருந்தாது.

தற்போதைய நாடாளுமன்றத்தின் பதவிக்காலம் நீடிக்கப்பட வேண்டுமானால் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே நாமுள்ளோம். ஆயினும் அவ்வாறு ஜனா திபதி முறைமையை நீக்கிவிட்டு மக்கள் ஆணையற்ற, ஊழல் மோசடியில் ஈடுபட்ட ஆட்சியாளர் களுக்கு அதிகாரத்தை வழங்க முடியாது.

எனவே நிறைவேற்று ஜனாதிபதி முறைமை நீக்கப்படும் நாளிலேயே நாடாளுமன்றையும் கலைத்து மக்கள் ஆணையுடன் ஆட்சியை அமைக்க வேண்டும் - என்றார். (ச-44)



# கசிப்பு காய்ச்சும் இடம் வவுனியாவில் முற்றுகை

## சந்தேகநபர்கள் ஐவர் கைது

வவுனியா, நவ. 8

வவுனியா - வேலங்குளம், குஞ்சுக்குளத்தில் கசிப்புக் காய்ச்சுமிடம் முற்றுகையிடப்பட்டு ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, பூவரசங்குளம் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் இந்தக் குற்றச் செயல் முறியடிக்கப்பட்டது.

இதன்போது சந்தேகநபர்களிடமிருந்து இரண்டு உள்ளூர்த் துப்பாக்கி, 52 ஆயிரத்து 500 மில்லிலீற்றர் கசிப்பு மற்றும் ஆயிரத்து 800 லீற்றர் கோடா என்பன கைப்பற்றப்பட்டன. கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களுக்கெதிராக வழக்குப் பதிவு செய்து வவுனியா நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-110)

# யாழ். இந்துக் கல்லூரியில் இன்று நவராத்திரி விழா

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் இந்து இளைஞர் கழகத்தின் ஏற்பாட்டில் நவராத்திரி காலக் கலைவிழா இன்று புதன்கிழமை காலை 8.30 மணியளவில் கல்லூரியின் சபாலிங்கம் அரங்கில் அதிபர் இ.செந்தில்மாறன் தலைமையில் நடைபெறவுள்ளது.

மேற்படி நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சைவசித்தாந்தத்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி சி. செல்வமனோகரன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். மேற்படி நிகழ்வில் நவமலர் நூல் வெளியீடு மற்றும் பல்வேறு கலைநிகழ்வுகள் இடம் பெறும். (ம-66)

### இந்தியக்...

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தா . நிரோஷன் பெரேரா மேலும் தெரிவித்ததாவது:-

இந்திய மீனவர்களுக்கு வடபகுதிக்கு வருவதற்கு 'பாஸ்' நடைமுறை வழங்குவது தொடர்பில் பேச்சு நடத்தப்படுகின்றது என்று பிரதமர் தினேஷ் குணவர்த்தன இந்திய ஊடகமொன்றுக்கு அறிவித்திருந்தார். அதேபோல இலங்கைக்கு கச்சதீவை வழங்குவதற்கு இந்திராகாந்தி எடுத்த நடவடிக்கை வரலாற்றுத் தவறு என இந்தியப் பிரதமர் அண்மையில் அறிவித்ததையும் ஊடகங்கள் வாயிலாக அறியமுடிந்தது. இந்த நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் இந்தியா சென்றிருந்தார். எனவே, வடக்கு கடல் எல்லை குறித்தும், கச்சதீவு குறித்தும் இந்தியக் கடனை இரத்துச்செய்துகொள்வதற்காக ஏதேனும் உடன்பாட்டுக்கு வந்துள்ளீர்களா? இது தொடர்பில் வடக்கு மீனவர்களும் குழப்பம் அடைந்துள்ளனர். அவர்கள் மத்தியிலும் இது தொடர்பாக சந்தேகம் நிலவுகின்றது. எனவே, இந்த விடயம் பற்றி அமைச்சர் தெளிவுபடுத்தவேண்டும். தற்போது வடக்கு கடற்பரப்புக்குள் வந்து இந்திய மீனவர்கள் சட்டவிரோதமாக மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டு எமது நாட்டுக் கடல் வளத்தை இல்லாதொழிக்கின்றனர். ஆனால், கைது செய்யப்படும் அவர்கள் இந்தியாவின் அழுத்தத்தால் விரைவில் விடுவிக்கப்படும் நிலைமையும் காணப்படுகின்றது - என்றார். (அ-ம-44)

### 137 கிலோ...

அவற்றைக் கடத்தினார்கள் என்ற குற்றச்சாட்டில் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நாட்டுக்குள் போதைப் பொருள்கள் மற்றும் பிற சட்டவிரோதப் பொருள்கள் வருவதைத் தடுக்கும் நோக்கில் கடற்படையினர், தீவைச் சுற்றியுள்ள கரையோர மற்றும் கடல் பகுதிகளில் வழக்கமான ரோந்து மற்றும் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். இவ்வாறாக நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட தேடுதல் நடவடிக்கையின்போதே இந்தக் கடத்தல் முறியடிக்கப்பட்டதுடன், மேற்படி மூன்று சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர்கள் பூநகரியைச் சேர்ந்தவர்கள். அவர்களிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-26)

### தபால்...

கண்டி மற்றும் நுவரெலியாவில் உள்ள தபால் அலுவலகக் கட்டடங்களை விற்பனை செய்யும், குத்தகைக்கு விடும் அரசாங்கத்தின் தீர்மானத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து இன்றும் நாளையும் தபாலக அலுவலர்கள் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபடத் தீர்மானித்துள்ளனர். இந்த நிலையிலேயே இன்றும், நாளையும், நாளைமறுதினமும் தபால் அலுவலர்களால் விண்ணப்பிக்கப்பட்டிருந்த விடுமுறைகள் அனைத்தும் இரத்துச் செய்யப்படுவதாக தபால்மா அதிபர் தெரிவித்துள்ளார். (அ-ம-6)

### இழுவைப்...

தேவானந்தா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுக் கருத்து வெளியிட்ட அவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:-

'இந்திய இழுவைப் படகு தொடர்பில் உங்கள் (நிரோஷன் பெரேரா எம்.பி.) கருத்துடன் உடன்படுகின்றேன். இழுவைப் படகுகளை ஒரு விநாடிகூட அனுமதிக்கக்கூடாது என்பதுதான் என்னுடைய நிலைப்பாடு. [illegible] சொல்லி வருகின்றேன். இந்தியாவில் தேர்தல் காலங்களில் கச்சதீவு குறித்து ஏட்டிக்குப்போட்டியான அறிவிப்புகள் வெளிவருவது வழமை. 74 இல் கைச்சாத்திடப்பட்ட கச்சத்தீவு ஒப்பந்தத்தால் 80 வீதமான வளங்கொழித்த பரப்பை நாம் இந்தியாவுக்கு தாரை வார்த்துவிட்டோம்' - என்றார். (அ-ம-44)

### இடைக்கால...

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அமைச்சரவைக்குள் என்ன நடந்தது என்பதை என்னால் கூறமுடியாது, நான் கூட்டுப் பொறுப்பை பாதுகாக்க விரும்புகிறேன். ஆனால், ஜனாதிபதி பின்னர் அலுவலகத்துக்கு அழைத்து நியமிக்கப்பட்ட குழுவை நீக்குமாறு கோபத்தோடு மிரட்டினார். இல்லையேல் விளையாட்டு அமைச்சையும் தன் கீழ் கொண்டு வருவேன் - என்றார். 'என்னை நீக்கிவிட்டு உங்கள் விருப்பப்படி முடிவெடுங்கள்' என ஜனாதிபதியிடம் கூறினேன். நியமிக்கப்பட்ட குழுவை நீக்கவே முடியாது என்றும் கூறினேன் . நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பை மதிக்கின்றோம். ஆனால், மறுபடியும் மோசடிக்காரர்கள் தான் அங்கு செல்லவுள்ளனர் - என்றார். (அ-ம-44)

### கிரிக்கெட்...

இலங்கை கிரிக்கெட் சபையின் தலைவர் ஷம்மி சில்வாவால் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனுவை பரிசீலித்த மேன்முறையீட்டு நீதிமன்றம் இந்தத் தடையுத்தரவைப் பிறப்பித்துள்ளது. இந்தத் தடையுத்தரவு 14 நாள்களுக்கு நடைமுறையில் இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, கிரிக்கெட் நிறுவனத்தின் செயற்பாடுகளை இடைநிறுத்தி விளையாட்டுத்துறை அமைச்சர் வெளியிட்ட வர்த்தமானி அறிவித்தலை நடைமுறைப்படுத்துவதற்கும் இடைக்கால நிர்வாக சபையை நியமிப்பதற்கும் தடைவிதித்து நீதிமன்றம் இடைக்கால உத்தரவு பிறப்பித்தது.

அத்துடன், அமைச்சரினால் நியமிக்கப்பட்ட அர்ஜுன ரணதுங்க தலைமையிலான கிரிக்கெட் இடைக்கால நிர்வாகக் குழுவின் உறுப்பினர்கள் அந்தப் பதவிகளில் பணியாற்றுவதைத் தடுத்து மற்றுமொரு இடைக்கால உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

அத்துடன், விளையாட்டுத்துறை அமைச்சர் உள்ளிட்ட பிரதிவாதிகளுக்கு, மனுதாரர் மற்றும் இலங்கை கிரிக்கட் அதிகாரிகளின் நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படுத்துவதைத் தடுக்கும் வகையில், நீதிமன்றம் மற்றுமொரு இடைக்கால உத்தரவைப் பிறப்பித்துள்ளது. (அ-ம)

### இலங்கை...

எதிர்பார்க்கப்படுகின்றது. விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க, இலங்கை கிரிக்கெட் சபைக்குள் இருப்பவர்களை ஊழல்வாதிகள் என்று விளித்ததுடன், இன்று அது தொடர்பில் பல்வேறு விடயங்களை வெளிப்படுத்துவேன் என்று தெரிவித்துள்ள நிலையிலேயே, இன்றையதினம் பல்வேறு அதிர்ச்சிகர அறிவிப்புகள், முடிவுகள் வெளிவரும் என்று கருதப்படுகின்றது. (அ-ம)

### வாள்களால்...

தந்தை, தாய் மற்றும் மகள் என மூவர் வசித்துவந்த வீட்டிலேயே இந்த அராஜகச் செயல்கள் இடம்பெற்றுள்ளன. தாக்குதலில் படுகாயமடைந்த தாய் முல்லைத்தீவு மாஞ்சோலை மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-75)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முயற்சியாண்மை ஊக்குவிப்பு மாணவரிடையே போட்டிகள்

கிளிநொச்சி, நவ.8

பாடசாலை மாணவர்களிடையே முயற்சியாண்மையை ஊக்குவிக்கும் செயற்றிட்டத்தின்கீழ் கிளிநொச்சி மாவட்டச் செயலக சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவால் கட்டுரை மற்றும் ஓவியப் போட்டிகள் அண்மையில் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நடத்தப்பட்டன.

இந்தப் போட்டிகள் கனிஷ்ட பிரிவு தரம் - 9 தொடக்கம் தரம் -11 வரையிலான மாணவர்களை உள்ளடக்கியதாகவும் சிரேஷ்ட பிரிவு தரம் -12 தொடக்கம் தரம்-13 வரையிலான மாணவர்களை உள்ளடக்கியதாகவும் மாவட்ட மட்டத்தில் இடம்பெற்றது.

நிகழ்வில் மேலதிக மாவட்டச் செயலர் திருமதி ந.இன்பராஜ், கிளிநொச்சி மாவட்டச் செயலக சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் ச. சஜீபன் மற்றும் உத்தியோகத்தர்கள், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-113)

# ஞானச்சுடர் மலர் வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் ஞானச்சுடர் 310 ஆவது ஐப்பசி மாத மலர் வெளியீட்டு நிகழ்வு அண்மையில் தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் ஓய்வு நிலை அதிபர் ஆ. சிவநாதன் மலரின் வெளியீட்டுரை, மதிப்பீட்டுரைகளை நிகழ்த்தினார். தொடர்ந்து சிறப்புப் பிரதிகள் வழங்கப் பட்டன. (ச-66)


## 1 நாள் கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு

**பிறிமா பாம்** ஒரு நாள் சிவப்பு, வெள்ளை, முட்டைக் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. ஒவ்வெரு வியாழக்கிழமையும் பெற்றுக்கொள்ள முடியும். தேவை உள்ளவர்கள் முற்பதிவுசெய்யவும்.
பண்ணையாளர்களுக்கு விநியோகம் இலவசம்.
**நியூ சிற்றி பாம்** (சின்னக்கடை மாக்கற்) முன்பாக
**குருநகர்- யாழ்ப்பாணம்.**

**077 468 3354**

## காணி, கடை, கட்டடத்துடன் காணி விற்பனைக்கு உள்ளன

1. பலாலி வீதி, திருநெல்வேலி சந்தியிலிருந்து வடக்கு பக்கமாக 100 மீற்றர் தூரத்தில் பிரதான வீதியில் அமைந்துள்ள காணி 5 1/4 பரப்பும் பாரிய களஞ்சியமும் சேர்த்து விற்பனைக்கு உள்ளது.
2. K.K.S. வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள களஞ்சிய வசதியுடன் கூடிய கடை விற்பனைக்கு உள்ளது.
3. A-9 வீதி, திருமுறுகண்டியில் பிரதான வீதியுடன் அமைந்துள்ள ஒரு ஏக்கர் காணியும் பாரிய கட்டடம் உணவகம் என்பன விற்பனைக்கு உள்ளது.

தொடர்புகளுக்கு:-
**077 3866 250**

(CR 40940) A-1

## தரமான காணி விற்பனைக்கு

GOLDEN Real Estate

யாழ்ப்பாணம் கைதடிச் சந்திக்கு அருகாமையில் A-9 வீதி முகப்புடன் 52 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

* 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்
* **நிலப்பரப்பு,** நன்னீரூற்று
* 18 அடிப்பாதையுடன்
* வட மாகாணசபை, சித்த மருத்துவமனை ஆகியவற்றிற்கு எதிரே பிரதான வீதியுடனான காணி
* யாழ். பஸ்நிலையத்திலிருந்து 6 KM தூரம்
* மிகவும் நல்ல சூழல், குடியிருப்புகள் சூழவுள்ள காணி
* வீடு கட்டுவதற்கும், களஞ்சியசாலைகள் அமைப்பதற்கும் உகந்த இடம்.
* பரம்பரைக்காணி, பலவருடகால தோம்பு, தூய உறுதி.
* தரகர் தேவையில்லை.

**பார்வையிடும் நேரம்:** காலை 6.00 - மாலை 6.00 மணிவரை
1 பரப்பின் விலை 24 லட்சம்

**Golden Real Estate (Pvt) Ltd.**
**Director & Owner :- T.Kalaithasan**
**076 755 8606, 077 623 4204**

(CS 26826) A-1

## வீடு வாடகைக்கு

நல்லூர் கோயிலுக்கு அருகாமையில் இரண்டு வீடுகள் வாடகைக்குண்டு.
077 306 8993


# மரண அறிவித்தல்

தோற்றம் 25 - 10 - 1943



மறைவு 07 - 11 - 2023

## கனகசபை புலேந்திரன்

யாழ்ப்பாணம் தாவடியை பிறப்பிடமாகவும், கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை புலேந்திரன் நேற்று (07-11-2023) செவ்வாய்க்கிழமை (இந்தியா) திருச்சியில் இறைவனடி சேர்ந்தார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை பாக்கியலட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லப்பு அன்னலட்சுமி தம்பதிகளின் அன்பு மருமகனும், கண்மலர் அவர்களின் அன்புக் கணவரும், சுகந்தினி, பிரபாகரன், சிவரஞ்சினி, பார்த்திபன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், செல்வராணி, செல்வநாதன், இந்திராணி, புஸ்பராணி, ஜெயராணி, தனபாலரத்தினம், வசந்தராணி ஆகியோரின் சிறியதந்தையும், சசிதரன், பெபிதா, ஜெயந்திரன், விஜயலட்சுமி ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான கனகரத்தினம், விவேகானந்தன், மகேந்திரன், கமலாதேவி மற்றும் கதிர்காமநாதன், சறோஜாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சரண்யா, சகிஷ்னா, சிந்துஜா, சிந்துஜன், மோனிசா, ஜசிந்தன், சபிசன், சோபிகா, சாலினி, சந்தியா, கரிஷ், டிசாந்தினி, மோகனா, பகிரதன், சுவேதிகா, நேசகுமார், லுக்சியா, காந்தரூபன் ஆகியோரின் அன்புப் பேரனும், மதுமித்ரா, கம்சிசா, கன்சிகா, சிவதர்சன், லட்சியா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (07.11.2023) செவ்வாய்க்கிழமை திருச்சியில் 69 /63, 2nd Street, 4th Cross M.M. நகர், திருச்சியில் 6.00 மணி அளவில் தகனக்கிரியை கள் நடைபெற்றது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
**V.ஜெயராணி**
(ஓய்வுபெற்ற ஆய்வு கூட சுகாதார உதவியாளர், யாழ். போதனா வைத்தியசாலை)
மற்றும் குடும்பத்தினர்

# பதினைந்தாம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம் 05 . 03 . 1932



மறைவு 24 . 10 . 2008

மீசாலை
## அமரர் சோமசுந்தரம் கணேசலிங்கம்
B.A, Dip in Edu., M.A
(இளைப்பாறிய கொத்தணி அதிபர் )
**திதி: அபரபக்க ஏகாதசி**

ஆண்டுகள் பதினைந்தாகிப் போனாலும்
போகாதே நின் நிழலாடும் நினைவுகள்
பேசியமொழிகள் அடி மனதின் அந்தகாரமாய்
ஏகாந்த தனிமையில் சுரம் வடிக்குதே
எம் விழிநீரும் நிதம் சொரியுதே
உம் கனிவு கொண்ட நிஜங்கள்
இங்கு நிஜமற்றுப் போகவில்லை
நிஜமாகி எமையென்றும் வழிப்படுத்தும்
நாட்கள் நடந்தபடி கடந்துமிங்கு உம்நினைவுகளை
நெஞ்சத்தில் சுமந்தபடி நாமிங்கு வாழ்ந்திடுவோம்.

குடும்பத்தினர்

35/1A, குமாரசாமி வீதி, கந்தர்மடம்.

"சிவகிரி", மீசாலை வடக்கு, மீசாலை.

72/27, பனிக்கர் ஒழுங்கை, திருநெல்வேலி.

(cs26788) (N.1)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 08.11.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.